உ

திருச்சிற்றம்பலம்

# திருமந்திரச் சிந்தனைகள்

சித்தாந்த கவிமணி செந்தமிழ் வேள்விச்சதுரர்

## மு.பெ. சத்தியவேல் முருகனார்

(மலேசிய அருள்நெறி திருக்கூட்ட சொற்பொழிவுத் தொகுப்பு நூல்)

## முகிழ்த்தது மூவாயிரந் தமிழ்

**(1.9.1999 – முதல் நாள் சொற்பொழிவு)**

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்கு
கருமூலம் இல்லையே காண்.

அடியார் பெருமக்களே!

மலேசிய அருள்நெறி திருக்கூட்டத்தின் தலைவர் – நாமெல்லாம் போற்றிப் புகழும் தான்ஸ்ரீ ஐயா திரு. சோம சுந்தரம் அவர்களும் அருமை மெய்யன்பர் திரு. கலியபெருமாள் அவர்களும் அடியேன் இந்த மல்லல்மா மலேசிய நாட்டில் காலை வைத்தவுடனேயே உழுவலன்பர் திரு. சண்முகம் அவர்கள் இல்லத்தில் அடியேனை வந்து சந்தித்தார்கள். அடியேனுடைய நூல்கள் சிலவற்றைப் பார்த்து ஈடுபட்டவர் இந்த அடியார் திருப்பெருகும் அருமைத் திருக்கூட்டத்தில் அடியேன் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அடியேன் இதனை அரும்பெறற் பேறாகவே கருதினேன். என்னுடைய மலேசியப் பயணம் ஜோகூர் மாநிலத்தடங்கிய கூலாய் பகுதுயில் ஒரு சிவன் கோயிலைத் தமிழ் திருமுறைகளால் திருக்குடமுழுக்கு செய்விக்க எழுந்தது. சில காரணங்களால் எனது மலேசியப் பயணம் சுருக்ககமாகவே அமைக்க வேண்டி இருக்கிறது. எனவே வாய்ப்புற்ற ஐந்து நாட்கள் தொடர் சொற்பொழிவாக பேச வேண்டும் என்று அன்புடன் தான்ஸ்ரீ ஐயா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்,

முதலில் தலைப்பு ‘உண்மை விளக்க’ சாத்திர நூலைப் பற்றி அமைக்கலாம் என்றிருந்தது. பிறகு ‘தலைப்பு திருமந்திரச் சிந்தனைகள்’ என்று மாறியது.

அடியேன் திருமந்திரத்திற்காக தாயகத்திலே பல முகாம்களை நடத்தி இருக்கிறேன். அந்த முகாம்கள் பல அன்பர்களின் ஆதரவால் தொடர்ந்து ஆண்டு தோறும் நடந்து வருகிறது. ஒன்பது ஆண்டுகளாக இத்திருமந்திர முகாம்கள் நடந்து வருகின்றன. ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கிறிஸ்துமஸ்ஸை ஒட்டி வருகிற விடுமுறை நாட்களில் கல்லூரி பேராசிரியர்கள் புலவர்கள் எல்லாம் கலந்து கொள்வதற்கு ஏதுவாகவும், அந்த நாட்கள் மார்கழி மாதத்தை ஒட்டி வருவதால் திருமண மண்டபங்கள் எளிதில் கிடைக்கும் (மார்கழி மாதத்தில் திருமணங்கள் பொதுவாக நடைபெறுவதில்லை) என்பதாலும் வாய்ப்பான மூன்று நாட்கள் பார்த்து முகாம்களை அமைப்போம். முதல் நாள் திருமந்திர முகாமிற்காக வந்தால் மூன்று நாட்கள் கழித்துத்

தான் திருமணக் கூடத்தை விட்டுச் செல்வர். உணவு, தங்குமிடம் அனைத்திற்கும் அங்கேயே ஏற்பாடு செய்யயப்படும். இப்படிப் பல ஆண்டுகளாக திருமந்திர முகாம்களை நடத்தி வருகிறோம்.

அத்துடன் ஈரோட்டில் திருமுறை அன்பர் திரு. த. விசுவநாதன் அவர்கள் ஏற்பாட்டில் ஒன்றே முக்கால் வருடமாக திருமந்திரச் செவாற்பொழிவுப் பணியை ஆற்றி வருகிறேன். இது மட்டுமல்லாமல் திருப்பெருந்திரு சோமசுந்தரர் குருவருட் பணி மன்றத்தின் சார்பாக சென்னை சைதாப்பேட்டையில் வாரந்தோறும் திருமந்திரச் சொற் பொழிவை ஒன்றரையாண்டுகளாக ஆற்றி வருகிறேன். திருமந்திரத்தில் முதலவதாக உள்ள பாயிர பகுதிகூட இன்னும் முடியவில்லை.

இதையெல்லாம் ஏதோ என்பெருமைக்காக எடுத்துரைக்கிறேன் என்று நினைக்க வேண்டாம். ‘தோன்றாத் தொற்றித் துறைபல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்றே’ என்ற நன்னூல் வாக்கை நன்கு உணர்ந்தவன் அடியேன். எனவே அதையெல்லாம் தொகுத்துக் காட்டுவதற்கு வேறு ஒரு காரணம் இருக்கிறது.

ஒரு கூட்டத்தில் ஒரு சொற்பொழிவாளர் ஒரு பாட்டு பாடினார். கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து ஒன்ஸ்மோர் என்று கூவினார். சொற்பொழிவாளர் இசையில் அவ்வளவு பெரிய வல்லபம் பெற்றவரல்லல. எனினும் கூடட்டத்தில் ஒருவர் விரும்பிக் கேட்கிறாரே என்று தம்மைத்தாமே வியந்து மனமகிழ்ந்து மறுபடியும் பாடினார். கூட்டத்தில் இருந்து அந்த நபர் மீண்டும் ஒன்ஸ்மோர் என்றார். மறுபடியும் சொற்பொழிவாளர் பாடினார். மீண்டும் ஒன்ஸ்மோர் என்றகுரல் எழுந்தது. மீண்டும் சொற்பொழிவாளர் பாடினார். இப்படிப் பலமுறை நடந்தது. இறுதியில் சொற்பொழிவாளர் தம்மைக் கட்டுப்படுத்த இயலாதவராய், இத்தனை முறை ஒரே பாட்டைப் பாடச் சொல்கிறீர்கள்! இந்தப் பாட்டில் இவ்வளவு ஆர்வமா? என்று கேட்டார். அதற்கு, ‘அதெல்லாம் ஒண்ணுமில்லை. நீ இந்தப் பாட்டைச் சரியா பாடற வரைக்கும் விடமாட்டேன்’ என்று பதில் வந்தது.

அதுபோல இவ்வளவு ஆண்டுகள் பல இடங்களில் திருமந்திரத்தைப் பற்றிப் பேசுவது சரியில்லை என்று நினைத்து ஆண்டவன் என்னைத் திரும்ப திரும்ப திருமந்திரத்தைப் பல இடங்களில் பேச வைக்கிறான் என்றே நான் நினைக்கிறேன். அது எப்படியானாலும் என்னை மீண்டும் மீண்டும் திருமந்திரத்தைப் பற்றிப் பேச வைக்கிற திருவருளுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒன்றை நான் உங்களுக்கு சொல்லியே ஆக வேண்டும். ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக அடியேன் செய்து வரும் திருமந்திரப் பணி சிறிய பணி தான் ஆனாலும், அது என்னை எவ்வளவு உயரத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறது என்பதை நினதைத்துப் பார்க்கும் போது என்னுடைய உள்ளத்திலே ஏற்படுகிற உணர்ச்சிகளை வடித்துச் சொல்ல வார்த்தைகள் இல்லை. உள்ளூர் தமிழர்களிடம் திருமந்திரத்தால் உரையாடி உறவாடிக் கொண்டிருந்தவனை கடல் கடந்து மலேசிய நாட்டுத் தமிழன்பர்கள் முன்னர் திருமந்திரத்தைப் பேச வைத்தது திருவருள் தானே!

அது மட்டுமல்ல, ஜோகூரில் கூலாய் பகுதியில் அமைக்கப்பட்ட சிவாலயத்திற்கு தமிழால் திருக்குடமுழுக்கு ஆட்ட வந்தவன் நான். உடன் என்னை இங்கே வருவிக்க மூலகாரணரான ஈரோடு அன்பர் த. விசுவநாதன் அவர்களும் நானும் அமைக்கப்பட்டுள்ள புதிய சிவாலயத்தில் மூலவருக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி கலந்தாலோசித்தோம். திருமூலநாதர் என்ற பெயரையே இருவருமாக தேர்ந்தெடுத்தோம். அன்பர்கள் அந்த பெயரை அங்கீகரித்தார்கள். இதன் மூலம் அடியேனின் பல நாள் திருமந்திரப் பணிக்கு வாய்ந்த அங்கீகாரம் போல் திருமூலநாதரைப் பிரதிட்டை செய்யும் பாக்கியம் பெற்றேன். அங்கே திருமூலநாதரை திருமந்திரப் பாடல்கள் பிரதிட்டை செய்துவிட்டு உடனாக இங்கே 43 ஆண்டுகட்கும் மேலாக கோலாம்பூரில் நற்றமிழ்ப் பணி ஆற்றிவரும் மலேசிய அருள் நெறித் திருக்கூட்டத்தில் திருமந்திரச் சிந்தனை! திருவருட் செயலன்றி இது வேறென்னவாக இருக்க இயலும் என்று எண்ணி எண்ணி பூரிக்கின்றேன்.

நிச்சயமாக இது தெய்வச் செயலே. ஏனென்றால் யாரும் இதைத் திட்டமிட்டுச் செய்யவில்லை. எங்கோ இருந்த என்னை இந்த நாட்டிற்கு அழைத்து வருகிறார்கள். இங்கே வந்தபின் அறிமுகமான தான் ஸ்ரீ ஐயா அவர்கள் ஏற்பாட்டில் திருமந்திரத்தைப் பற்றிப் பேசுகிறேன். அதிலும் முதலில் உண்மை விளக்கம் என்பது பற்றிப் பேசுவதாக இருந்தது மாறி திருமந்திரம் பற்றிப் பேசவைத்தது திருவருளன்றி வேறேன்ன?

இனி இந்த ஐந்து நாள் திருமந்திரச் சொற்பொழிவை எப்படி அமைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி திட்டமிடுவோம். இது ஜனநாயகம் கோலோச்சும் காலம். எனவே மக்களைக் கேட்டு இதை அமைக்கலாமல்லவா? தான் ஸ்ரீ ஐயா அதை எப்படிஅமைத்துக் கொள்ளலாம் என்று வகுத்துக் கூறவில்லை. அடியேனாக ஒரு பாதை அமைத்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் திட்டமில்லாத எதுவும் தோற்றுப் போகும். திட்டமில்லாத வாழ்க்கை வீணாகும். அது போல் திட்டம் இல்லாத சொற்பொழிவும் பரிமளிக்காது.

திருமந்திரச் சொற்பொழிவில் முதல்நாள்தோற்றுவாய். அதனை நூல் மற்றும் நூலசிரியர் வரலாறும் காலமுகமாக எண்ணிப்பார்ப்போம். அடுத்த நாள் தமிழ் ஆகமம் என்று அமைத்துக் கொள்வோம். அதற்கு மறுநாள் திருமந்திரத்தில் கிரியைகள் என்று அமைத்துக் கொள்வோம். நான்கு நேயர் விருப்பபம். அதாவது தான்ஸ்ரீ ஐயா அவர்கள், “திருமந்திரத்தில் ஆறந்தங்கள் பற்றிப் பேசப்படுகின்றன அவற்றைச் சிறிது விளக்க வேண்டும்“ என்று கேட்டுக்கொண்டார்கள். எனவே நான்காம் நாள் அதைச் சிறிது சிந்திப்போம். ஐந்தாம் நாள் இவற்றிற்கெல்லாம் மணிமுடியாக திருமந்திரத்தில் கூறப்பட்ட திருக்கூத்து தரிசனத்தைப் பற்றி சிந்தனை ஒன்பதாம் தந்திரத்தோடு திருமந்திரம் நிறைவு பெறுகிறது. எனவே அந்த தந்திரத்தில் வரும் அரும்பெறல் வரமான திருக்கூத்துத் தரிசனத்தைச் சொல்லி நிறைவு செய்வோமானால் மேலே நம்மைப் பார்த்து முறுவல் செய்து கொண்டிருக்கிற திருமூலர் (அரங்கில் மாட்டப் பட்டுள்ள படத்தில் உள்ள திருமூலர்) மனம் மகிழ்வார் என்ற எண்ணத்தில் இப்படி திட்டமிட்டு அமைத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன். இது உங்கக்குச் சம்மதம்தானே? (கூட்டத்தினர் ஆமோதிக்கின்றனர்)

இனி நம் திட்டப்படி திருமந்திரச் சிந்தனையைத் தோற்றுவாய் என்ற நிலையிலே முகிழ்த்தது மூவாயிரந்தமிழ் என்பதையொட்டித் தொடங்குவோம்.

பெரியோர்களே! திருமூலர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர்களை அறிமுகப்படுத்தியும் இவர்களுக்கு அடித்தெண்டனிட்டும் பாடப் பெற்ற நூல் திருத்தொண்டத் தொகை; பாடியவர் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவரான நம்பியாரூர்—அதாவது சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அவர் பாடியது அறுபது பேர்களை; இவரது தந்தையார், தாயார் மற்றும் இவர் ஆகிய மூவரையும் சேர்த்து சைவச் சான்றோர்கள் அறுபத்து மூவராக வணங்கினார்கள். சரி! சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகையில் அறுபது அடியார்களைப் பாடிப் பரவினார் என்பதை நினைவில் வைப்போம். அறுபது அடியார்களைப் பாடி வணங்கிய அவர் அதில் இரண்டே இரண்டு பேரைத் தான் பிரான் என்ற சொல்லைச் சேர்த்துக் கூறி பெருமைப் படுத்துகிறார். இது மற்ற 58 அடியார்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு. யார் அந்த இரண்டு அடியார்கள்? ஒருவர் சமபந்தர்; மற்றவர் திருமூலர்.

“வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும்

மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணா

எம்பரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்“

இது சம்பந்தரைப் பற்றிக் கூறியது.

“நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்“

இது திருமூலரைப் பற்றிக் கூறியது.

சம்பந்தரைச் சொல்லும்போது எம்பிரான் என்றார். எங்கள் பிரான் என்று பொருள். எங்கள் என்று சொல்லுவதால் அது குறிப்பிட்ட சிலரைக் குறித்தது. அதாவது தேர்ந்தெடுத்த சிலரைக் அது குறிக்கிறது. ஆனால் திருமூலரைக் குறிக்கும் போது நம்பிரான் என்றார். இதில் உரிமையும் ஒட்டுறவும் அதிகமாகத் தெரிகிறது. நம் என்ற சொல்லால் நம்மை எல்லாம் உட்படுத்தலே இந்தச் சொல் குறிக்கும் வட்டம் மிகப்பெரிதாய் விரிந்ததை உணரலாம். எனவே நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் என்று பாடும் போது திருமூலரோடு நம் ஒட்டுறவை அதிகமாக உணர்கிறோம்.

இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். பிரான் என்ற சொல் இரண்டே இரண்டு பேருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. திருநாவுக்கரசருக்குக்கூட கொடுக்கப்படவில்லை. அப்படியானால் இந்த பிரான் என்ற சொல்லுக்கு அப்படியென்ன தனிச்சிறப்பு? உண்மையிலேயே பிரான் என்ற சொல் தனிச்சிறப்புமிக்கது தான். அது ஒர் அற்புதமான தூயதமிழ்ச்சொல். பிரியான் என்பதன் அதன் பொருள். இன்றும் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் எப்போதும் நம்மைவிட்டுப் பிரியாதவன் என்று கூறவேண்டும்.

நாம் இப்போது ஊரிலே நாட்டிலே எத்தனையோ பேரிடம் பழகுகிறோம். ஆனால் எல்லோருடனும் எல்லாக் காலமும் இருப்போம் என்று கூறமுடியாது. நம்முடைய ஒருகாலத்து நண்பர்கள் இப்போது விரோதிகளாக இருக்கலாம். ஒரு காலத்தில் விரோதியாக இருந்தவர்கள் இப்போது நண்பர்களாக உறவாடலாம். அப்படியும் இல்லையென்றால் ஒரு காலத்தில் நமக்கு நெருங்கிய நண்பனாக இருந்தவன் இடத்தால் பிரிந்து நம்மால் தொடர்புகொள்ள முடியாத நிலையில் இருப்பான். அவ்வளவு ஏன்? நம்மோடு வாழ்கின்ற மனைவி கூட நம்மோடு ஒன்றியிருப்பாள் என்று கூறிவிட முடியாது. ஆனால் நாம் உதறித் தள்ளினாலும் உதாசீனம் செய்தாலும் உண்மைப்பரிவோடு சூக்குமமாக நம்மை விட்டுப் பிரியாதவன் கடவுள் ஒருவன் தான். இதைத்தான் வடமொழியில் அத்துவிதம் என்று கூறுவார்கள். தீந்தமிழ் இதை உள்ளடக்கி பிரான் என்று கூறும்.

காரைக்கால் அம்மையார் இந்தப் பிரான் என்ற சொல்லில் மூழ்கிப் போவார். அந்தப் பாடல் மிக அழகான பாடல்

"பிரான் என்று தன்னைப் பன்னாள்

பரவித் தொழுவார் இடர்க்கண்டு

இரான் என்ன நிற்கின்ற ஈசன் கண்டீர்"

என்பது அவர் அருளிச் செய்த திருவிரட்டை மணிமாலை திருவாக்கு.

பிரான் என்று சொல்லி யாராவது தம்மை வணங்கினால் அவருக்கு ஒரு துயர்வருமானால் அதைக் கண்டு பொறுத்துக் கொண்டு இரானாம் ஈசன்; ஓடி வந்து அருள் செய்வானாம். எனவே அவ்வளவு தனிச் சிறப்பு பெற்று முக்கியத்துவம் வாய்ந்த சொல் பிரான் என்பதாகும். பிரான் என்ற சொல் யாருக்கு உரியது? கடவுளுக்கு மட்டுமே உரியது. ஏனெனில் அவர் மட்டுமே நம்மை என்றும் பிரியாதவர். பிறகு வேறு யாரையாவது அச்சொல்லால் குறிக்கலாமா என்றால் கடவுளுக்குச் சமமானவர்களை குறிக்கலாம். கடவுளுக்குச் சமானமானவர்கள் குருமார்கள். எனவே குருவை குருபிரான் என்ற சொல்லால் குறிக்கலாம்.

"குருவே சிவனெனக் கூறினன் நந்தி"

என்பது திருமந்திரவாக்கு. எனவே குரு வேறல்ல கடவுள் வேறல்ல. இதனால் கடவுளுக்கு மட்டுமே உரியதாக வைக்கப்படும் பிரான் என்ற சொல் குருவையும் சென்று சேர்கிறது. இவ்விருவரைத் தவிர வேறு யார்க்கும் இந்த சொல் சென்று சேராது. ஆ! இந்த பிரான் என்ற சொல்தான் எவ்வளவு உயர்ந்தது?

இந்தப் பிரான் என்ற சொல்லால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சம்பந்தர், திருமூலர் என்கிற இரண்டே இரண்டு பேரை மட்டும் குறிப்பதால் இவ்விரண்டு பேருடைய உயர்வு நமக்குப் புரிகிறது. அதிலும் திருமூலரைப் பற்றிக் குறிப்பிடும் போது நம் என்ற சொல்லைச் சேர்த்ததனால் அவரது உயர்வு இன்னும் அதிகமாக புலப்படுகிறது. இந்தப் பூவுலகில் அனைவரையும் உள்ளடக்கி நம் என்று கூறியதானல் திருமூலரே உண்மையான ஜகத்குரு என்று அடையாளம் காட்டப்பட்டார். நாம் இது புரியாமல் யார் யாரையோ ஜகத்குரு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதை விடுவோம்! இனி உண்மையான ஜகத்குருவான திருமூலரின் வாழ்க்கை வரலாறு என்ன என்று பார்ப்போம்.

ஒருவருடைய வாழ்க்கை வரலாறு மிக அதிகமாகக் குழப்பப் பட்டது என்றால் அது திருமூலருடைய வாழ்க்கை வரலாறு தான். இந்தக் குழப்பச் சூறாவளியில் தெளிவான கலங்கரை விளக்கமாகக் கிடைப்பது சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளியுள்ள வரலாறு ஒன்று தான்.

திருமூலர் இந்த நாட்டிற்கு—மலேசியா இல்லை. தமிழ் நாட்டிற்கு—எப்படி வருகிறார் என்பதை சேக்கிழார் எடுத்துரைக்கிறார். திருமூலர் வருகையில் திருமூலரை மிக அற்புதமாக அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார்.

அந்திஇளம் பிறைக்கண்ணி அண்ணலார் கயிலையினில்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மா லயன் முதலா இமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகள்ஒருவர்

திருமூலர் யார் என்று அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார். நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகள். அவர் எங்கே இருந்து வருகிறார்? கயிலையில் இருந்து வருகிறார். கயிலையில் இவருக்கு என்ன வேலை? அங்கே உள்ள நந்தியெம் பெருமானிடம் திருவருள் பெற்று அங்கே தங்கியிருந்தார். நந்தியெம் பெருமான் என்றால் யாரு? நந்தி மாதிரி குறுக்கே வரான் பாரு என்று சொல்வார்களே அந்த நந்தியா? அடடா ! தற்கால தலைமுறைக்கு உள்ள சமய அறிவின் சிறப்பே சிறப்பு! நம்முடைய நோக்கத்திற்கு தடையாய் இருப்பதை எல்லாம் நந்தி என்று குறிப்பிடும் நமது அறிவை என்ன சொல்ல?

உயர்திணை பிறப்பை மூன்று வகையாகக் கூறுவர். தேவர், மானிடர், நரகர் என்று அழைப்பர். நரகரை விட மேலானவர்கள் மானிடர். மானிடர்களை விட மேலானவர் பிரம்மா. பிரம்மாவிற்கு தந்தையாய் பிரம்மாவை விட மேலானவர் திருமால். திருமாலை விட மேலானவர் நந்தி.

இதைப் பற்றி ஒரு பழைய கணக்கு ஒன்றை அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.

நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாரணர் அங்ஙனே
ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்

ஈறிலாதவன் ஈசன் ஒருவனே

ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒரு பிரம்மா; ஒவ்வொரு அண்டத்திற்கும் ஒரு திருமால். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன்; ஒவ்வொரு சூரியனும் ஒவ்வொரு அண்டம். இந்த அண்டங்கள் அனைத்திற்கும் சேர்த்து கணக்கெடுத்து அப்பர் சுவாமிகள் கூறுகிறார். இதுவரை நூறுகோடி பிரம்மாக்கள் இறந்து போயினார் ஆறுகோடி நாராயணர்கள் இறந்து போயிருக்கிறார்கள். இந்திரர்கள் எண்ணிக் கையோ எண்ணித் தொலையாது. கங்கைக் கரை மணலை எண்ண முடியுமா? முடியுமென்றால் அத்தனை இந்திரர்கள் இறந்து பட்டார்கள் என்று கொள் என்கிறார் அப்பர். காலகாலனாய் காலங் கடந்து இறப்பு என்பதில்லாமல் எஞ்சியுள்ளவன் ஈசன் ஒருவனே என்றார்.

இந்தத் திருமால்களுக்கெல்லாம், பிரம்மாக்களுக்கு எல்லாம், இந்திரர்களுக்கு எல்லாம் மேலானவர் நந்தியெம்பெருமான். ஈசனடி போற்றி அவன் சேவடியை என்றும் மறவாமையால் இறவாமை சந்தித்து இறைவனுடன் பேரா இயற்கைப் பேரின்பத்தில் திளைப்பவர் நந்தியெம் பெருமான். இவர் பெயரை தடைகளுக்கு வைத்து மகிழும் நம்மறிவை என்ன சொல்ல?

இந்த நந்தியெம்பெருமானைப் பணி கொள்கிறார் இறைவன். அதாவது கயிலையங்கிரியில் தாம் வீற்றிருக்கும் கோயிலுக்கு முதற்பெரு நாயகமாக நியமிக்கிறார். வேலை என்னவென்றால் இறைவனது எண்ணப்படி யாரை எப்போது இறைவனது கோயிலுக்குள் பிரமமாவாயினும் சரி, இந்திரனாயினும் சரி யாராய் இருப்பினும் தடுத்து நிறுத்தி இறைவன் எண்ணப்படி அனுமதி உண்டானால் உள்ளே விடுவது. இவருக்கு மேலே வேறு ஏதாவது அதிகாரிகள் உண்டா? இல்லை, இவர்தான் எல்லாம். எனவே முதற்பெருநாயகம் எனப்பட்டார். எந்த கோயிலுக்கு? முந்தை நிகழ் கோயிலுக்கு முதற்பெருநாயகம்.

கயிலையில் இறைவன் வீற்றிருக்கும் கோயிலுக்குத் தேதி உண்டா? மண்ணுலகில் உள்ள மற்ற எல்லா சிவன் கோயில்களுக்கும் தேதி உண்டு. இந்த கோயில் நிறைவுற்று திருக்குடமுழுக்கு ஆட்டப்பெற்றது என்று நினைவு மலர் வெளியிடுவோம். கயிலையில் இறைவன் வீற்றிருக்கும் கோயிலுக்கு இப்படி ஒரு தேதி ஏது?

அவ்வளவு ஏன்? மண்ணுலகிலேயே திருவாரூர் கோயில் எப்போது எழுந்தது என்று கூற இயலவில்லையே என்று பெருமூச்சு விட்டுப் பாடுகிறார் பதிகம் ஏழ் எழுநூறு பாடிய திருநாவுக்கரசு பெருமான்.

சிலையால் முப்புரமெரித்த முன்னோ பின்னோ

திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே

திரிபுரம் எரித்ததற்கு முன் இந்த திருவாரூர் கோயில் அமைந்திருக்குமோ என்று கேட்கிறார் அப்பர். இன்னும், திருவண்ணா மலைக்கும் முன்னே திருவாரூர் கோயில் எழுந்ததோ என்று கேட்கிறார் அப்பர்.

“ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ

ஒருகம் போல் ஏழுகமாய் நின்ற நாளோ“

அவ்வளவு ஏன்? சைவர்கள் கோயில் என்று குறித்தாலே அது தில்லையைத் தான் குறிக்கும். தில்லைக் கோயிலுக்கும் முன்னது திருவாரூர் கோயில் என்று கருதுகிறார் அப்பர். அக்கருத்தை உள்ளிட்டு,

“மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை

ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ

அணிஆரூர் கோயிலாக் கொண்ட நாளே“

என்று பாடுகிறாார். இங்கே குறிப்பிட்ட சம்பங்களையெல்லாம் ஆராய்ந்து அவை நடந்த தேதி என்று ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டோமானால் திருவாரூர்க் கோயிலுக்குத் தேதி கூறிவிடலாம்.

ஆனால் கயிலாயத்தில் உள்ள இறைவன் கோயிலுக்கு என்றால் அதுவும் முடியாது; காரணம், இந்த சம்பவங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது கயிலைக்கோயில். அங்கே அரும்பெருஞ்சோதியாக வீற்றிருக்கும் இறைவன் எந்த தேதிக்கு உட்பட்டவன்? ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி அவன். அந்த சோதிக்கு கி.பி., கி.மு என்றெல்லாம் ஏதாவது வரையறை செய்து கூறமுடியுமா?

எனவே இன்னகாலம் என்று வரையறுத்துக் கூற முடியாத முந்தைநிகழ் கோயில் என்று கூறினார் சேக்கிழார். அந்தக் கோயிலுக்கு முதற்பெருநாயகமானவர் நந்தியெம் பெருமான் என்றால் அவரும் இன்ன காலம் என்று வகுத்துக் கூறமுடியாதபடி ஊழிஊழிக்காலமாய் அந்தப் பதவியில் இருக்கிறார் என்பது பொருள். இதைப் பற்றி கேள்விப்பட்டால் நம்ம ஊர் மந்திரிகள் எல்லாம் பெருமூச்சு விடுவார்கள் என்பது திண்ணம். அது ஒரு புறம் இருக்கட்டும்.

இத்தனை அரிய பெருமைகள் வாய்ந்த நந்தியெம்பெருமானிடம் தீட்சை பெற்று அருளை ஊதியமாகப் பெற்ற நான்மறை யோகிகளில் ஒருவர் நமது திருமூலர் என்று அறிமுகப்படுத்துகிறார் சேக்கிழார்.

சேக்கிழாருக்கு இது எப்படித் தெரியும்? திருமூலரே திருமந்திரத்திலே தம்மைப் பற்றிக் கூறுகிறார். அதைக் கொண்டு சேக்கிழார் திருமூலரை நமக்கு மேற்கூறியபடி அறிமுகப்படுத்தினார். திருமூலர் திருமந்திரத்தில் தம்மைப் பற்றி என்ன சொல்லிக் கொள்கிறார்? இது திருமந்திரப் பாயிரத்தில் வருகிறது.

நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின்

நந்திகள் நால்வர் சியோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்

என்றிவர் என்னோடு எண்மரு மாமே

இந்தப் பாடலில் நந்தி அருள்பெற்றவர்கள் யார் யார் என்று பெயர் சுட்டிக் கூறுகிறார். மொத்தம் எட்டுப்பேராம் இவரோடு சேர்த்து மொத்தம் எட்டுப்பேராம். நந்திகள் நால்வர், அதாவது சனகர்,சனந்தனர், சனாதனர் சனற்குமாரர் என்ற சனாகதி முனிவர்கள் நால்வர். பிறகு சிவயோக மாமுனி; இவர் யார் என்று எந்த வரலாறும் எந்த புராணமும் சுட்டிக் காட்டவில்லை. இவரைப் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை. அடுத்து மன்று தொழுத பதஞ்சலி மற்றும் வியாக்ரமர் என்றிவர்கள் இருவர். இவர்களோடு திருமூலரையும் சேர்த்து மொத்தம் எட்டுபேர். என்றிவர் என்னோடு எண்மருமாமே என்று தெளிவாகக் கூறுகிறார். இவர்கள் எல்லாம் அருட்கலையை, சாகாக்கலையை ஒன்றாகப் படித்தார்களாம். அதாவது இவர்கள் எல்லாம் ஒரு சாலை மாணாக்ககர்கள்; குரு நந்தியாம். அது ஒரு பெரிய பல்கலைக்கழகம். கயிலாயப் பல்கலைக் கழகம். யூனிவர்சிடி ஆஃப் மலேசியா, யூனிவர்சிடி ஆஃப் மெட்ராஸ் என்றெல்லாம் சொல்கிறோமோ அது போல அது யூனிவர்சிடி ஆஃப் கைலாஷ்.

ஒருவர் தன்னைப் பற்றிச் சொல்ல வேண்டிய நேரமும் உண்டு என்று இலக்கணம் கூறுகிறது. தோன்றாத் தோற்றித் துறை பல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்று தான். ஆனால் ஒரு பட்டதாரி

வேலைக்குச் சேரும் போது என்னைப் பற்றி நானே கூறிக்கொள்வது தற்புகழ்ச்சி ஆகிவிடும்; ஆகவே அவற்றைச் சொல்லக் கூச்சப்படுகிறேன் என்ற சொன்னால் வேலை கிடைக்குமா? அங்கே பயோ டேட்டா கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

எனவே தான், 'மன்னுடை மன்றத்து ஓலை தூக்கினும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்' என்று இன்னின்ன இடங்களில் தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே என்று இலக்கணம் தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்களை குறிக்கிறது. அதன்படி தற்சிறப்புப்பாயிரம் அமையும். எனவே பயோ டேட்டா என்பது தமிழில் தற்சிறப்பு குறிப்புகள் என்று ஆகும். அந்த இலக்கணப்படி தன்னைப் பற்றி திருமூலர் திருமந்திரத்தில் கூறியது தான் நாம் முன்னே கண்டோம்.

திருமூலர் வரலாற்றுப்படி அவருக்கு இப்போது பெயர் சுந்தரநாதர். இவர் கொஞ்ச நாள் தமிழ் நாட்டிற்குப் போய் வரலாமே என்று நினைக்கிறார். எதற்காக? பொதிய மலையில் முதிய தமிழ் உரைத்த முனிவராகிய அகத்தியரைப் பார்க்க. இதனைச் சேக்கிழார் மிக அழகாகக் கூறுகிறார்.

மற்றவர்தாம் அணிமாதி வரும்சித்தி பெற்றுடையார்

கொற்றவனார் திருக்கயிலை மலை நின்றும் குறுமுனிவர்

உற்றதொரு கேண்மையினால் உடன்சிலநாள் உறைவதற்கு

நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்.

ஆ! சேக்கிழாரின் வார்த்தைகள் எவ்வளவு ஆழமான வார்த்தைகள்! ஒவ்வொரு வார்த்தையையும் சேக்கிழார் ஒரு கைதேர்ந்த பொற்கொல்லன் விலையுயர்ந்த ஆபரணத்தில் கல்லைப் பதிப்பது போல தெரிந்தெடுத்து வைக்கிறார். அதாவது ஆபரணத்தில் கல்லைப் பதிப்பது போல சொல்லைப் பதிக்கிறார். நம் போன்ற எளியவர்களால் இதை நினைத்துக் கூட பார்க்க முடியாது. அப்படி ஒரு ஆழமான சொற்கள். பாடல் கூறுவது என்ன?

"மற்றவர்தாம் அணிமாதி வரும் சித்தி"

அருளாளர்கள் எப்போதுமே அணிமாதி சித்திகளைத் தேடிப் போவதில்லை. ஆனால் அந்தச் சித்திகள் வேர்களைத் தேடிச் சென்று அடையும் என்கிறார் சேக்கிழார். இது ஒரு மிகப் பெரிய கருத்து; நாம் நினைவில் வைக்கவேண்டியது. பொதுவாக நாம் என்ன நினைக்கிறோம் என்றால் அருளாளர்கள் என்றால் திடீர் என்று அவர்கள் ஏதாவது ஒர் அற்புதத்தை நிகழ்த்த வேண்டும். அப்படி திடீர் என்று ஒரு இலிங்கத்தை வரவழைத்தால் அவர் ஒரு பெரிய சாமியார்; அவர் பின்னாலே ஆயிரம் ஆயிரமாய்க் கூட்டம். திடீரென ஒரு இலிங்கத்தை ஒரு லிங்கத்தை, வேலை வரவழைத்தால் அவரே பெரிய அருளாளர் என்று மயங்கிப் போகிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால் இப்படி ஏதாவது செய்தால் தான் அவரை அருளாளர் என்று நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் உண்மை நேர் எதரிமாறாக உள்ளது. சித்திகள் தான் அருளாளரை நாடி நிற்கும். இந்த கருத்தைக் கூறிய சேக்கிழாருக்கு நாம் தலை வணங்க வேண்டாமா? இதைப் புரிந்து கொண்டால் எத்தனையோ போலி சாமியார்கள் உருவாகவே வாய்ப்பில்லாமல் போகுமே!

ஒரு கரும்பு ஆலையை எடுத்துக் கொள்வோம். அந்த ஆலையின் இறுதி நோக்கம் கரும்பிலிருந்து சர்க்கரையை உற்பத்தி செய்வது. இதற்கு ஆலையில் சில முறைகள் மேற்கொள்ளப்படும். எடுத்தவுடனே கரும்பிலிருந்து சர்க்கரை கிடைத்துவிடாது. அதற்கு எத்தனையோ முறைகள் உள்ளன! அந்த முறைகளின் இடையில் மொலாசஸ் என்ற கழிவுப்பாகு கிடைக்கும். இது ஃபைனல் பிராஎடக்ட்—அதாவது இறுதியான

முகிழ்பொருள் அல்ல. ஆலையில் உள்ளவர்கள் கழிவுப்பாகை எதிர்நோக்கி முறைகளில் இடையில் கழிவுப்பாகு கிடைக்கிறது. இதையும் நம்மவர்கள் விட்டு வைப்பதில்லை. இதைக் கொண்டு போய் காய்ச்சி சாராயம் எடுக்கிறான். அதுக்கப்புறம் நடப்பதையெல்லாம் அருள்நெறிக் கூட்டத்தில் சொல்வதற்கில்லை. எனவே ஒரு கரும்பாலையில் சர்க்கரைக்கு குறிவைத்து செயல்படும் போது இடையில் சாராயத்திற்கு அடிப்படையான கழிவுப்பாகு தானாகக் கிடைக்கிறது. அது போல ஆன்ம விடுதலையையும், அரன்கழல் இன்பத்தையும் குறிவைத்து யோக நெறி முறைகளை மேற்கொள்கின்றனர் யோகிகள். அதன் இடையில் வந்து சேருவது அணிமாதி சித்திகள்—கரும்பாலையில் கழிவுப் பாகைப் போல.

யோகிகள் இடுப்பிற்கு கீழாக உள்ள அடுப்பு போன்ற பகுதியில் நாகம் போல சுருண்டு கிடக்கும் குண்டலினியைத் தூண்டி விடுவார்கள். குண்டலினி சத்தியால் உந்தப்பட்டு ஆன்மாவானது 36 தத்துவங்களின் கட்டிலிருந்து விடுபட்டு சுழிமுனை நாடியில் ஒளியாக மேலேறும். குண்டலினி சக்தியால் தத்துவக் கட்டிலிருந்து மூலதாரத்தில் ஆன்மா விடுபடுவது இருக்கிறதே இது தான் ஆன்மாவிற்கு உண்மையான பிறப்பு. ஆனால் நாம் தாயின் யோனியிலிருந்து விடுபவடுவதை மட்டுமே பிறப்பு என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

இதை உள்ளடக்கித் தான் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்று பாடினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருவாரூரிலே நண்டு பிறக்கிறது; தேள் பிறக்கிறது; நண்டு போன்றவர்கள் பிறக்கிறார்கள்; தேள் போன்றவர்கள் பிறக்கிறார்கள்; திருவாரூரிலும் திருடன் உண்டு. அங்கே பிறந்த ஒரே காரணத்திற்காக இவர்களுக்கு எல்லாமா சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை அடிமை என்று கூறிக்கொண்டார்? அப்படி நினைப்பது எவ்வளவு அறிவின்மை?

இங்கே திருவாரூர் என்பது மூலதாரத்தைக் குறிக்கும். இதெல்லாம் யோக சாதனை செய்யும் அடியார்கள் நடுவே ஒரு சங்கேத பாஷை. இந்த சங்கேத பாஷைக்குப் பொருளைத் தொகுத்துக் கூறும் பாடல் உண்டு.

திருவளர் ஆரூர் மூலம் திருஆணைக் காவே நாபி

மருவளர் பொழில் சூழ் அண்ணா மலைமணி பூரம் நீவிர்

இருவரும் கண்ட மன்றம் இதயமாம் திருக்கா ளத்தி

பொருவரும் கண்ட மாகும் புருவமத் தியமே காசி

திருவாரூர்—மூலாதாரம், திருவானைக்கா—சுவாதிட்டானம்; அண்ணாமலை—மணிபூரம்; தில்லை—அநாகதம்; திருக்காளத்தி—விசுத்தி; காசி—ஆஞ்ஞை

இந்தப் பாடலைப் பாடி நமக்கு உதவியவர் திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூர் பற்றிப் பாடிய பல பாடல்களில் இந்த மூலாதார யோக அனுபவமே பேசப்படுவதை கூர்ந்து கவனித்துப் பயன் கொள்ள வேண்டும்.

இனி, 36 தத்துவங்களிலிருந்து விடுபட்டு திருவாரூராகிய மூலாதாரத்தில் பிறந்த ஆன்மா சுழி முனை நாடியில் மேல்நோக்கி ஏறத்தொடங்கும் போது அப்போது இயல்பாகவே ஆன்மாவிற்கு அட்டமாசித்திகள் தானாக வந்தடையும். இப்படி மேல் ஏற ஏற அட்டமா சித்திகள் மட்டுமல்ல இன்னும் பலவிதமான சித்திகள் வந்தடையும். அடிப்படையாக எட்டு சித்திகள் கிடைக்கும்; இந்த முறையில் வந்தடையும ˙சித்திகள் பல என்று சொல்வார்கள். ஏமசித்தி, கருமசித்தி, ஞானசித்தி என்றெல்லாம் அருளாளர்கள் கூறுவார்கள்.

இதில் ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். அட்டமாசித்தி எய்திய ஆன்மா அந்த சித்தி ஆடுவதில் இறங்கி விடுமானால் அந்த ஆன்மா மேலேறி அருளாளராகாது. அந்த மேனிலையில் இருந்து அந்த ஆன்மா இறங்கி விடும். பாம்பன் சுவாமிகள் கூறுகிறார்: எம்பெருமானே! உன்னை எண்ணி தியானம் செய்கிறேன். எனக்கு என்ன வேண்டும் தெரியுமா? துறவு நான் பெற்று விட்டேன். அந்த துறவு எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? ஆடலில் துறவு வேண்டும் என்றார்.

அதாவது அட்டமாசித்திகளை வைத்து அவை வாய்க்கப் பெற்ற ஒருவர் வித்தை காட்டப் பயன்படுத்தக்கூடாது. இந்த உரகத்திற்கு நான் எதற்காக வந்திருக்கிறேன்? வித்தை காட்டவா? நான் முயன்று இறைவன் திருவடி அடைடயவே இந்த உலகத்திற்கு வந்திருக்கிறேன்.

எனவே அட்டமா சித்தியில் நாம் மூழ்கி விடுவோமானால் பின்னால் நாம் நம் ஆன்மாவை இழந்து விடுவோம்.

ஆனால் உலகில் மக்கள் பலர் தவறாகவே எண்ணம் கொண்டு இருக்கிறார்கள். சாதாரண மக்கள் என்ன நினைக்கிறார்கள்? யார் அட்டமா சித்திகளைச் செய்கிறாார்களோ அவர்கள் மிகப் பெரியவர்கள், அருளாளர்கள் என்று நினைக்கிறார்கள்.

இதுபற்றி இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு நல்ல உதாரணம் சொன்னார். வட நாட்டிலே—இங்கே எப்படின்னு தெரியல—அம்பரமா மிட்டாய் குவித்து வைத்து விற்பான். அந்த மிட்டாயில் ஈ எறும்பு மொய்த்தா மிட்டாயை விற்க முடியுமா? யார் வாங்குவா? எனவே என்ன பண்ணுவாங்கன்னா அந்த மிட்டாயைச் சுற்றி சர்க்கரையை இடை விட்டு வளையமா தூவி வைப்பான். என்ன காரணம்? ஈ, எறும்பு எல்லாம் சர்க்கரையை மொய்க்கும். அதுக்கப்புறம் அவை தாண்டாது. மிட்டாய் தூய்மையாக காப்பாற்றப்படும். சுற்றித் தூவிய சர்க்கரை தான் அட்டமாசித்தி கூம்பாக அம்பாரமாக வைக்கப்பட்ட மிட்டாய் தான் சிவபெருமான் என்றார்.

அப்படியானால் சிவன் கழல் மலர்கள் தான் வேண்டுமென்றால் சர்க்கரையில்—அது தான்—அந்த அட்டமாசித்தியில் நாம் மூழ்கிவிடக்கூடாது. அட்டமாசித்தியல் மூழ்கினால் சர்க்கரையில் மூழ்கிய எறும்பு போலாகி விடுவோம். எனவே தான் பாம்பன் சுவாமிகள் ஆடலில் துறவு வேண்டும் என்று கேட்டார்.

எனவே உண்மையான அருளாளர்கள் அட்டமாசித்தியை நோக்கி இருக்கக் கூடாது. அவர்கள் மேலே மேலே போய்க் கொண்டே இருப்பார்கள். அவர்கள் பின்னால் அட்டமாசித்திகள் கைகட்டி வரும். வேண்டும் போத இறவைன் திருவருள் சம்மத்ம உ்ணடா என்று ஆராய்ந்து, உண்டானால் சித்திகளை அருளாளர்கள் பயன்படுத்துவார்களே ஒழிய அவற்றைப் பயன்படுத்தி மக்களிடையே வித்தை காட்டுவது அவர்களுக்கு வேலையல்ல.

இத்தனை கருத்தையும் உள்ளடக்கி,

“மற்றவர்தாம் அணிமாதி வரும் சித்தி பெற்றுடையார்“ என்று பாடினார் சேக்கிழார். அதாவது சுந்தரநாதர் தென்திசை நோக்கிப் பயணம் மேற்கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்; அவர் பின்னால் அட்டமா சித்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்று மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

இங்கே சுந்தரநாதர் தூலமாகத் தெரிபவர்; அவர் பின்னால் வரும் அட்டமாசித்திகள் சூக்குமம்—கண்ணுக்கு தெரியாதவை. கண்ணுக்கு தெரியாமல் வரும் அட்டமாசித்திகளை ஏன் சேக்கிழார் கண்ணுக்குத் தெரிய வரும் சுந்தர நாதருடன் காட்டினார்? காரணம், வரலாற்றின்படி பின்னால் இறைவன் திருவருளால் மூலன் என்கிற இடையன் உடலில் மேல் கூடுவிட்டு கூடு பாயும் சித்தியை மேற்கொள்ளப் போகிறார். இது அட்டமா சித்திகளில் ஒன்று. தன் பின்கைகட்டி வரும் அட்டமா சித்திகளில் ஒன்றைப் பின்னால் பயன்படுத்தப் போகிறார் என்பதை முன்னரே உணர்த்த அணிமாதி வரும் சித்தி என்று பாடிய

சேக்கிழாரின் வரலாறு உணர்த்தும் வல்லபத்தை என்ன சொல்லி பாராட்டுவது. அதனால் தான் அவரைத் தெய்வச் சேக்கிழார் என்று ஆன்றோர் போற்றினார்.

இவ்வாறு வருஞ்சித்தி பெற்றுடையாராகிய சுந்தரநாதர் பொதியமலைக்குப் புறப்படுகிறார். "குறு முனிவர் உற்றதொரு கேண்மையினால்" அவருக்கு அகத்திரோடு நெருங்கிய நட்பு. அந்த நட்பு காரணமாக அவரை ஒரு தடவை பார்த்துவிட்டு சில நாள் அவரோடு தங்கிச் செல்ல வேண்டுமென்று எண்ணிப் புறப்படுகிறார். இங்கே சேக்கிழார் பொதிய மலையைப் பற்றிச் சொல்லும் போது ஒரு சொல்லைப் போடுகிறார். அந்தப் பொதியமலை என்ன பொதியமலையாம்? நற்றமிழின் பொதியமலை என்றார். பொதியமலை தமிழ் விளங்குகிற இடம் சேக்கிழார் தமிழ் என்று மட்டும் சொல்லாமல் நற்றமிழ் என்று ஏன் சொன்னார் அதற்கு பொருள் என்ன? நற்றமிழ் என்றால் நன்மையைத் தருகின்ற தமிழ் என்று பொருள். என்ன நன்மையைத் தருவது? சின்னச்சின்ன வார்த்தைகள் தான். ஆனால் பெரிய பொருள்களை எல்லாம் உள்ளடக்கிப் பெரியவர்கள் சொல்வார்கள்.

நற்றமிழ்—நல்ல தமிழ் என்று பொருள் கொள்ளக்கூடாது. நன்மை பயக்கும் தமிழ் என்று பொருள் கொள்க என்று சிவக்கவிமணி திரு.சுப்பிரமணியம் அவர்கள் உரை எழுதினார். அத்துடன் நன்மையாவது இறைவன் திருவடியை அடைவது; காரணம் உண்மையான நன்மை அது மட்டுமே தரும் என்று விரித்துக் கூறினார்.

வேறு எந்த மொழிக்கும் இல்லாத பெருமை ஒன்று தமிழுக்கு உண்டு. தமிழ் ஒன்று தான் சிவானுபூபதியை லேசில் எய்துவிப்பது என்று வள்ளலார் கூறினார்.

ஆக சேக்கிழாருடைய எண்ணம் எது? தமிழ் தான் இறைவனை அடைவிக்கும் என்பது சேக்கிழார் எண்ணம். இதை நினைவில் கொள்ள வேண்டியது நமது கடமை என்பதற்காக நற்றமிழ் என்று தமிழுக்கு அடை கொடுத்து போக்கிற போக்கில் மிகப் பெரிய உண்மையைச் சொல்லிச் செல்கிறார் சேக்கிழார்.

பொதிய மலைக்குப் புறப்பட்டு விட்டார் சுந்தரநாதர். நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக் கொண்டார்.

கேதாரம், அதன் பின்னால் காசி இப்படி பல தலங்களை வரிசையாக பார்த்துக் கொண்டே வருகிறார்—பாடல்கள் வருகின்றன. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்தவர் தமிழகத்திற்கு வந்து விடுகிறார். தமிழகத்திற்கு வந்தவர் மெல்ல மெல்ல தெற்கு பக்கமாக உள்ளே நுழைகிறார். அங்கே சுந்தரநாதர் காவிரி நதியை முதலில் பார்க்கிறார். அதாவது தில்லையைப் பார்த்துவிட்டு தெற்கே போனவர் காவிரியை முதன் முதலில் பார்க்கிறார். அங்கே ஆறு மட்டுமா ஓடுகிறது? சேக்கிழாரின் தமிழார்வமும் சைவத்திறமும் கரைபுரண்டு ஓடுகின்றன. அவர் பாடுவதைப் பாருங்கள்.

சுடர்நிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
அடல்விடையின் மேல் வருவார் அமுதுசெய அஞ்சாதே
விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வளநிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரை யணைந்தார்.

புலியூர் — திருத்தில்லை. தில்லையில் சுந்தரநாதர் சில நாட்கள் தங்கியிருக்கிறார். " சுடர் நிலை மாளிகைப் புலியூர் தன்னில் உறைந்து இறைஞ்சிப் போய்" தன்னில் உறைந்து—கொஞ்ச நாள் தங்கி என்று

பொருள். அடுத்து "அடல்விடையின் மேல்வருவார் அமுது செய்ய அஞ்சாதே கடல்வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்தார்" என்ற வரிகள் வைரவரிகள்; ஈடு இணையில்லாத தமிழ்.

பெருமக்களே! எல்லா நதிகளும் மேற்குத் திசையிலிருந்து ஓடி கிழக்குத் திசையில் கடலில் கலக்கும். மேற்கே இருந்து ஓடி வந்து கீழ்த்திசையில் கடலில் கலக்கின்றன அத்தனை நீர்பெருக்குகளுக்கு நதி என்று பெயர். இது பெண்பால். இதற்கு மாறாக நர்மதை. தபதி என்கிற இரு நதிகள் மட்டும் கிழக்கே தொடங்கி மேற்கே கடலில் கலக்கும்.

தண்ணீருடைய இயல்பு என்னன்னா மேட்டிலிருந்து பள்ளத்திற்கு இயல்பா பாயும்; இது இயல்பு. இதற்கு மாறாக பள்ளத்திலிருந்து மேட்டிற்குத் தண்ணீர் போகணும் என்றால் அது எதிர்நீச்சல். இயல்புப்படி செய்வது பெண் தன்மை; எதிர்த்து போராடுவது ஆண் தன்மை எதிர்த்துப் போராடுவது ஆண் தன்மை. மேற்கு பக்கம் மேல் பக்கம்; கிழக்குப் பக்கம் தாழ்வான கீழ் பக்கம். மேல் பக்கத்திலிருந்து கீழ்ப்பக்கத்திற்கு ஓடி வரும் நீர்பெருக்குகள் எல்லாம் இயல்புப்படி வருகின்றன. எனவே பெண்ணின் பெயர்க்கு உரிய இகர ஈற்று விகுதியுடன் நதி என்றார்கள். மேற்கே இயல்பிற்கு மாறாக ஆண் தன்மையுடன் சென்று கடலில் கலப்பதால் நர்மதையையும், தபதியையும் நதம் என்று கூறினார்கள். நர்மதை நதி என்று கூறக்கூடாது; நர்மதை நதம் தபதி நதி என்று கூறக்கூடாது; தபதி நதம். அப்படிப் புலவர்கள் எங்கேயாவது தவறி அவற்றை நதி என்று பாடினார்களானால் அதனை பால் வழுவமைதியாகக் கொள்ள வேண்டும்.

நதிகள் கடலில் கலக்கும் விதத்தால் பெயர் பெறுவதைப் பார்த்தோம். இனி, எல்லா நதிகளும் கடலில் கலக்கிறது என்று கூறமுடியுமா? ஒரு நதி கடலில் கலப்பதில்லை. அது எந்த நதி? இங்கே உள்ள அன்பர்கள் நீண்ட நெடிய பாரம்பரியம் உடையவர்கள். உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். வைகை நதி கடலில் கலப்பதில்லை.

வைகை கடலில் போய் சேராதது ஏன் என்று ஒரு விவாதம் நடந்தது குலோத்துங்க சோழன் அவையிலே. அவையில ஒட்டக்கூத்தர் புலவர் பேரரசாக வீற்றிருக்கிறார். அருகில் வெண்பா வீறுடையராக புகழேந்தி அமர்ந்திருக்கிறார். ஒட்டக்கூத்தர்சோழ நாட்டில் பிறந்தவர். புகழேந்தி களந்தையில் பிறந்தவர். பாண்டிய நாட்டின் பால் பற்றுடையவர். இருவரும் பெரும் புலவர்கள்.

ஒட்டக்கூத்தர் சொன்னார், "எங்க சோழ நாட்டு காவிரி மாதிரி உங்க பாண்டிய நாட்டு வைகை வருமா? வைகை கடலில் கலக்காதநதி"

அந்தந்த நாட்டுக்கு உரியவர்கட்கு அந்தந்த நாட்டின் மேல் ஒரு பற்று தானாக இயல்பாக வந்து விடுகிறது. குறிப்பாக திருநெல்வேலிக்காரர்கள் எங்கே போனாலும் எங்க தாமிரபரணி தண்ணீர் மாதிரி வருமா? என்பார்கள். அதிலே ஒரு ஈடுபாடு அவர்கட்கு. அதைப்போல ஒட்டக்கூத்தருக்கு தன் நாட்டு காவிரி மேல் ஒரு ஈடுபாடு. எனவே காவிரிபோல வருமா? என்று கேட்டார்.

புகழேந்தி சொன்னார், "உங்க நதி சாதாரண நதி. எல்லாவற்றையும் போல அதுவும் கடலில் கலக்குது. எங்க வைகை நதி கடலில் கலக்கலே. ஏன் தெரியுமா? இந்த கடல் இருக்கே இது பாற்கடலுக்கு உறவு. பாற்கடல் சிவபெருமானுக்கு நஞ்சளித்தது. ஆலகாலம் அங்கே இருந்து தானே வந்தது? எம்பெருமானுக்கு நஞ்சை அளித்த பாவியாகிய இந்த கடலோடு நான் போய் சேர்வேனா? என்று சொல்லி சிவபத்திமிக்க வைகை கடலில் கலக்கல."

இதை உள்ளடக்கி அவர் பாடிய அருமையான பாடலைக் கேளுங்கள்

நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த பாவியென்று

வாரியிடம் புகுதா வைகையே –மாறி

இடத்தும் புறத்தும் இருகரையும் பாய்நது

நடத்தும் தமிழ்ப்பாண்டி நாடு.

அற்புதமான தற்குறிப்பேற்றக் கற்பனை ! இந்தக் கற்பனை புகழேந்திக்கு எப்படித் தோன்றியது? இந்தக் கற்பனைக்கு வித்திட்டவர் சேக்கிழார். ஏனெனில் சேக்கிழார் புகழேந்திக்குக் காலத்தால் முற்பட்டவர். 'சுடர்நிலை மாளிகைப் புலியூர்' என்ற இந்தப் பாடலில் இருந்து புகழேந்தி எடுத்துக் கூறினார்.

சேக்கிழர் இது பற்றி என்ன கூறினார் என்பதைப் பார்ப்போம். காவிரியினுடைய காண்டூர் அதாவது வரை படத்தைப் பார்த்தோமானால் அது தொடங்குகிற இடம் மிகச் சின்னதாய் இருக்கும். இங்கு இருக்கிற மலேசிய அன்பர்கட்கு எப்போதாவது வாய்ப்பு நேரும்போது அதாவது இந்தியாவிற்கு வரும் போது தலப்பயணம் செய்வதாய் இருந்தால் காவிரி எங்கே ஆரம்பிக்கிறதோ அந்த இடத்திற்கு மைசூருக்கு சென்று பார்க்கணும். மைசூருக்கு அருகே குடகு மலையில் சின்னதா ஒரு தொட்டி போல ஒரு இடத்தில் காவிரி தொடங்குவதைப் பார்க்கலாம். தலைக்காவிரி என்று கூறுவார்கள்.

இப்படி காவிரி ஆரம்பிக்கிற இடத்தில் தலைக்காவிரி என்ற பெயரில் கொஞ்சமாக தலைகாட்டும். இது வெளியே கிளம்பி பெரிதாகி விரிந்து சோழ நாட்டுக்கு வரும்போது அகண்ட காவிரி என்று பெயர் பெறும். அங்கே நன்றாக பரந்து விரியும் காவிரி கடலில் சென்று கலக்கிற இடத்தில் பாரத்தோமென்றால் மிகக்குறுகி சிறிதளவே இருக்கும். தரப்பயணம் செய்தவர்கட்கு அது நன்கு தெரியும். இந்த காவிரி, ஆரம்பிக்கும் போது சிறிதாய் ஆரம்பித்து, சோழநாட்க்கு வரும் போது அகண்ட காவிரியாகி, கடலில் கலக்கும் போது மீண்டும் குறுகி விடுவது ஏன்? சேக்கிழார் காரணம் சொல்கிறார்.

எம்பெருமானுக்கு நஞ்சளித்த பாவியாகிய கடலுக்குப் போய் என்னுடைய வளத்தை எல்லாம் ஏன் போய் கொட்டுவது என்று சோழ நாட்டுல செல்லும் போது அகண்ட காவிரியாகி தமது வளத்தை எல்லாம் வாரி வழங்கி கடலை அடையும் போது கடல்வயிறு நிறையாதபடி குறுகி அடைந்ததாம். "கடல் வயிறு நிறையாத காவிரியின் கரை அணைந்தார்" என்ன அழகான வார்ததைகள்!

காவிரி குறுகித் தொடங்கி, சோழநாட்டில் அகன்று, கடலில் செல்லும் போது மீண்டும் குறுகுவது இயற்கையாக நடக்கிறது. அதிலே ஒரு கற்பனையை ஏற்றிச் சொல்கிறார். அந்தக் கற்பனையில் சிவானுபவத்தை சிவபக்தியைக் காட்டுகிறார். இந்த அற்புத அருட்கற்பனையை அப்படியே பின்னால் தமக்கு வேண்டியவாறு வைகைக்கு ஏற்றிக் கையாண்டார் புகழேந்தி.

ஒவ்வொரு சொல்லையும் மிக ஆழமான உட்பொருளை வைத்துப்பாடும் சேக்கிழாரை எப்படி பாராட்டுவது?

சேக்கிழார் திருமூல நாயனார் வரலாற்றைப் பாடுகிறார். மொத்தம் எத்தனைப் பாடல்களில் பாடினார்? 28 பாடல்கள். அதற்கே ஒரு பொருள் உண்டு. பெரியவர்கள் இப்படித்தான் பாடல் எண்ணிக்கையில் கூட பொருளை வைத்துப் பாடுவார்கள். இதற்கு அலகுநிலைப் பொருள் என்று பெயர்.

அருணகிரி நாதர் கந்தரனுபூதி பாடினார். அது தான் இந்த நிலவுலகில் அவர் பாடிய இறுதி நூல். ஏறத்தாழ நமக்கு அவர் எழுதிவிட்டுச் சென்ற உயில் போன்ற நூல் – அந்த அயில்வேலன் நூல். "மெய்யன்பர்களே ! இந்தாங்க ! நான் உங்களுக்கு விட்டுச் செல்லும் சொத்து. நான் பெற்ற சொத்தை ஞானவாரிசுகளாகிய உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்" என்பது போல அருணகிரியார் பாடியருளிய நூல் கந்தரநுபூதி. அதனை 51 பாடல்கள் என்று அமைத்துப் பாடினார். எதற்காக 51 என்று வைத்தார்?

எழுத்துக்கள் மொத்தம் 51. "அகர முதலெனவுரை செய் ஐம்பத்தோரட்சரமும்" என்பது அவர் பாடிய திருப்புகழ் வரிகள். இந்த 51 எழுத்துக்களை வைத்து ஒரு சொல் மாலை தயாரிக்கிறார். இந்தச் சொல் மாலையை முருகப்பெருமானே! உன்னுடைய பன்னிரு தோள்களிலே சாத்துகிறேன். இந்த மலர்மாலை என்றைக்கும் வாடாது. என்ன மலர்? சொல்லால் ஆனமலர். சொல்லுக்கு அடிப்படை எழுத்து. எழுத்து மொத்தம் எவ்வளவு?51. எனவே 51 பாடல்களைப் பாடினார். 'மாத்ருகா புஷ்ப மாலை கோல ப்ரவாள பாதத்தில் அணிவேனே' என்று அவரே ஒரு திருப்புகழில் பாடினார். இப்படி அருளாளர்கள் பாடும் பாடல் எண்ணிக்கை ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருள் உண்டு.

சேக்கிழாரையே எடுத்துக் கொள்வோம். ஒரு பெரிய வரலாற்றுக் காப்பியத்தைப் பாடத் தொடங்குகிறார்; மிகப்பெரிய வரலாற்று நூல். பெரியோர்களுடைய பெருமைகளை எல்லாம் தொகுத்து சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் பாடல்கள் மொத்தம் 4286. இத்தனைப் பாடல்களால் அவர் பாடியது 63 நாயன்மார்களை. இந்தப் பெருமகனார் முதலில் பாடிய பாடல் ஆண்டவன் வாக்கெடுத்துத் தந்து உதவியது. உலகெலாம் என்று அம்பலவன் தொடங்கி வைத்தான்.

| | | |
|---|---|---|
| உலகெ லாதுணர்நத தோதற் கரியவன் | = | 16 எழுத்துக்கள் |
| நிலவு லாவிய நீர்மலி வேணிய | = | 13 எழுத்துக்கள் |
| னலகில் சோதிய னம்பலத் தாடுவான் | = | 16 எழுத்துக்கள் |
| மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம் | = | 18 எழுத்துக்கள் |

இந்தப் பாடலில்ல இருக்கிற எழுத்துக்களை எண்ணிப் பார்த்தோமானால் மொத்தம் 63 வரும். 63 அடியார்களைப் பற்றிய வரலாறுகளைப் பாடியது என்று குறிப்பாகக் காட்ட 63 எழுத்துக்களை வைத்தார்.

சிலபேர் எண்ணிப் பார்க்கும் போது 63க்கு அதிகமாக வருதே என்று குழம்புவார்கள். என்ன காரணம் என்றால் சில பதிப்புகளில் பதம் பிரித்து ஒற்றெழுத்துக்கள் அதிகமாகப் பதிப்பித்திருப்பார்கள். இது அறிவார்ந்த கூட்டம். அதனால் பிரச்சினை இல்லை. சில இடங்களில் பேசும் போது ஒற்றெழுத்துன்னா புரியாது. அது தாங்க, மேலே புள்ளி வைத்திருக்குமே, க்,ங்,ச் என்பது போல என்றால், ஓ! பொட்டு வச்ச எழுத்தாம்பான். மெய்யெழுத்து – ஒற்றெழுத்து என்றால் புரியவில்லை.

அடடா! தமிழ் என்னமா வளருது! பெருமக்களே! குறில் எழுத்திற்கு ஒரு மாத்திரை; நெடில் எழுத்திற்கு 2 மாத்திரை. மெய்யெழுத்து ஏதாவது ஒற்றெழுத்திற்கு அரை மாத்திரம். நானும் என் மனைவியும் பேருந்தில் செல்கிறோம். மகனைக் கையில் வைத்திருக்கிறாள் என் மனைவி. பயணச்சீட்டு அதாவது டிக்கட் வாங்கும் போது எனக்கும் என் மனைவிக்கும் வாங்கினால் போதும். கைக்குழந்தைக்கு டிக்கட் கேட்க மாட்டார்கள். அது போல மற்ற எழுத்துக்களுக்கு ஒலியளவான மாத்திரை உண்டு. ஒற்றெழுத்து கைக் குழந்தை போல அதற்கு ஒலியளவு வைத்து எண்ணப்படாது. எனவே மெய்யெழுத்தை விட்டுவிடுவார்கள். இது பாட்டின் அசை, சீர் கணக்கில் வரும்.

ஆனால் பாட்டின் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை என்றால் இதையும் சேர்க்க வேண்டும். அப்படி இந்த பாட்டின் மொத்த எழுத்துக்களை எண்ணினோம் என்றால் 63 வரும். அதற்கு பதப்புணர்ச்சி சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உலகு எலாம் உணர்ந்து என்று பதம் பிரித்துச் சொல்வோமானால் மொத்த எழுத்துக்கள் 11 வரும். அதை உரிய பதப்புணர்வோடு உலகெ லாமுணர்ந்து என்று கூறினால் எழுத்துக்கள் 9 வரும். இங்ஙனம் உரிய பதப்புணர்வோடு இந்தப் பாடலை எழுதி எண்ணினோம் என்றால் 63 வரும்

(மேலே எழுதிக்காட்டி எண்ணி இருப்பதைப் பார்க்க) எனவே 63 நாயன்மார்களை பாட வந்தவர் அதைக் குறிக்க 63 எழுத்துக்கள் வைத்து முதல் பாடல் பாடினார். இது தெய்வத் திருவருளால் அமைவது. இந்தப் பாடலுக்குத் தெய்வம் தானே வாக்கெடுத்து உதவியது. எனவே அப்படி அமைவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இப்படி இன்னும் பல உதாரணங்களைக் கூறலாம். ஒன்றிரண்டு கூறுகிறேன். இப்படி சந்தர்ப்பம் அமையும் போது நாம் பார்க்கவில்லையன்றால் நாம் வேறெப்போது பார்ப்போம்?

மெய்கண்டார் சிவஞானபோத நூல் செய்கிறார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் மன்னர். மலேசிய அருள்நெறித் திருக்கூட்டத்திற்கு சிவஞானபோதம் அத்துப்படி என்பது உலகறிந்த விஷயம். அந்த சிவஞான போதம் மொத்தம் 12 சூத்திரங்களைக் கொண்டது. நூலைத் தொடங்குமுன் மெய்கண்டார் மங்கல வாழ்த்து கூறுகிறார்.

கல்லால் நிழல்மலை – கல் ஆல் நிழல் மலைவு

வில்லா ரருளிய – இல்லார் அருளிய

பொல்லா ரிணைமலர் – பொல்லார் இணை மலர்

நல்லார் புனைவரே – நல்லார் புனைவர்ஏ

இந்த மங்கல வாழ்த்தில் எண்ணிப் பார்த்தீர்களானால் சொற்கள் மொத்தம் 12 வரும் (சொற்களை பிரித்துக் காட்டியிருப்பதை மேலே பார்க்க) 12 சூத்திரங்களால் ஆனது இந்நூல் என்பதைக் காட்ட 12 சொற்களால் மங்கல வாழ்த்து பாடினார்.

கந்தரனுபூதியில் கூட இன்னொன்றைக் கூற வேண்டும். அதில் 7வது பாட்டு,

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது

இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்

சுடுவாய் நெடுவே தனைதூள் படவே

விடுவாய் விடுவாய் வினையா வையுமே

யார் வந்து கேட்டாலும் இல்லைன்னு சொல்லாம கொடுத்துவிடு என்றார். கெடுவாய் மனனே கதிகேள்! உன் கையில் உள்ளதை ஒளித்து வைத்து இல்லைன்னு சொல்லிவிடாதே. கொடு! இவன் என்ன பார்ககவா போகிறான் என்று ஒளிக்காதே. கரவாது இடு! இதை இவன் வந்து கேட்கும் பொது கொடுக்கும் படி என்னிடம் அதை ஆண்டவன் முன்கூட்டியே கொடுத்து வைத்தானே என்று ஆண்டவனை நினைத்து நன்றி சொல்! ஆ! எவ்வளவு உறுதியான உபதேசம்! இது மிகப் பெரிய நிலையில் அமைந்த பாடல். ஆறு ஆதாரங்கள் உள்ளே நமது உடலில் சுழிமுனை நாடியில் இருப்பவை. ஏழாவது சகஸ்காரம் என்பது. இது தலைக்கு மேலே ஒரடிக்குள் இருப்பது. அங்கே சென்ற ஆன்மா அதற்கு பின் அண்டத்திலே கலந்து விடும். அந்த நிலையில் இருக்கிறார் அருணகிரிநாதர். அப்போது பாடியருளிய கந்தரனுபூதி. தான் சகஸ்தாரத்தில் ஏழாவது ஆதாரத்தில் இருந்து அண்டத்தில் கலக்கும் முன் இந்த உலக மக்களுக்கு ஓர் உறுதியான உபதேசத்தை அருள வேண்டும் என்று நினைக்கிறார். அந்த உபதேசம் தான் மேலே கூறிய

பாடல். அது எவ்வளவு உயர்வானது? தாம் எந்த இடத்தில் இருந்து பாடியது? என்பதைக் காட்ட அதாவது ஏழாவது ஆதாரத்தில் கூறிய உயர்ந்த உபதேசம் என்பதைக் காட்ட ஏழாவது பாடலாக அதை வைத்தார்.

இப்படி அலகுநிலைப் பொருளில் வைத்துக் காட்டிய குறிப்புகளை அதாவது எண்ணிக்கையில் வைத்துக் காட்டிய குறிப்புகளைப் பல எடுத்துக் காட்டலாம். திருமந்திரத்திலேயே கூட இப்படி ஒன்றைக் காட்டலாம். 9ம் தந்திரத்திலே திருக்கூத்து தரிசனம் பாடியருளினார் திருமூலர். அதை 82 பாடல்களைக் கொண்டு அமைத்தார்.

இறைவனை எட்டும் இரண்டுமான பொருள் என்று மறைவான பொருளை உள்ளடக்கிக் கூறுவர் ஞானியர் “எட்டினோடு இரண்டும் அறியேனையே பட்டி மண்டபம் ஏற்றினை“ என்பார் மணிவாசகர். மறைவாகக் கூறப்பட்ட எட்டும் இரண்டும் இது தான் என்று வெளிப்படுத்தி இருக்கிறேன் என்பதைக் காட்ட திருக்கூத்து தரிசனத்தை 82 பாடல்களால் அமைத்தார் திருமூலர்.

இங்ஙனம் அலகுநிலை காட்டி பொருள் காட்டிய திருமூலரின் வரலாற்றைக் கூற வருகிறார் சேக்கிழார். அவரைப் போலவே இவரும் எண்ணிக்கையில் ஒரு பொருள் வைத்துப் பாடுகிறார். ஆகவே 28 பாடல்களை அமைத்து இவர் வரலாற்றினை எழுதினார். இதற்கு என்ன பொருள்?

28 ஆகமங்களைச் சாரமான தமிழாக வகுத்தவர் திருமூலர். அது தான் தமிழ் மூவாயிரமான திருமந்திரம். எனவே இவரது வரலாற்றை 28 பாடல்களில் அமைத்தார்.

ஆ! சின்ன சின்ன விஷயங்களிலும் பெரிய பெரிய பொருளை உள்ளடக்குவதில் சேக்கிழார் வல்லவர். அது அருட்தன்மையினால் அல்லது வராது. எனவே தான் அவர் தெய்வப்புலவர் என்று அழைக்கப்பட்டார். தெய்வப்புலவர் இருவர் மட்டுமே. ஒன்று சேக்கிழார்; மற்றவர் திருவள்ளுவர்.

இனி வரலாற்றிற்கு வருவோம். சுந்தரநாதர் காவிரிக்கரையை வந்தடைகிறார். காவிரியைத் தாண்டியவர் திருவாவடுதுறை போய் பசுபதியாரை கண்டு வணங்குகிறார். என்னவோ தெரியல, மனது அதிலேயே ஈடுபட்டு விடுகிறது. அவருக்கு அங்கேயே இருந்து விடலாம் போலத் தோன்றுகிறது.

பெரியோர்களே! தல யாத்திரை போவோம் என்றால் நல்ல துணை வேண்டும். அப்படிப்போனால் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். இங்குள்ள நமதன்பர் கலியபெருமாளைப் போன்றவர்களை அழைத்துச் சென்றால் இன்னின்ன பாடல்கள் இங்கே சொல்லப்பட்டது;; இன்னின்ன நிகழ்ச்சிகள் இங்கே நடந்தது என்று விவரிப்பார்.

வாரியார் சுவாமி இரண்டாவது முறை கயிலை யாத்திரை சென்றார். அப்போது அவரோடு கூட போக வேண்டுமென்று பலர் துடித்ததர்கள். இரண்டாவது கயிலை யாத்திரையில் அமர்நாத் செல்ல திட்டமிடப்பட்டது. இப்போது அடியேன் சொல்வது நடந்த நிகழ்ச்சி. கோயம்பத்தூரில் ஒர் அன்பர். அவர் வாரியார் மேல் அளவிறந்த பக்தியுடையவர். ஏற்பாடு செய்தவர்கள் பயணம் செய்பவர்கள் பட்டியல் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ கோளாறினால் இந்த கோயம்பத்தூார் அன்பர் பெயர் விடுபட்டுப் போச்சு. அவருக்கு துக்கம் தாங்கவில்லை. யாத்திரைக்கு யார் ஏற்பாடு செய்தாரோ அவர் வீட்டிற்கு முன்னால தூக்கில் தொங்கித் தற்கொலை செய்து கொண்டார். எந்த அளவிற்கு அவர் மனதைப் பாதித்திருந்தால் அவர் இப்படி செய்திருப்பார்?

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? மிகப்பெரியவர் செல்கின்ற பயணத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டால் பல நல்ல விஷயங்களை அறிந்து அனுபவிக்கிற பேறு கிடைக்கும். இதை நழுவவிட நல்ல மனங்கள் சம்மதியாது.

இது ஒரு புறமிருக்கட்டும். சிவபெருமானே யாத்திரைக்குச் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இது எவ்வளவு அற்புதமான வாய்ப்பு மலேசிய நாட்டில் உள்ள அருள்நெறித் திருக்கூட்டத்தார் அனைவரும்

வந்துவிடமாட்டீர்களா? ஆனால் அந்த பாக்கியம் நமக்கு இல்லை. காரணம் சிவபெருமான் புறப்பட்டது இப்போதல்ல. பல நூற்றாண்டுகட்கு முன்னே. சுவாமி பல பேரைக் கூட்டவில்லை. யாத்திரைக்கு புறப்பட்டது இரண்டே இரண்டு பேர் தான். ஒருவர் சுவாமி; மற்றவர் அவரது தோழரான குபேரன். ஒரு வேளை வழிச்செலவுக்கு வசதியாகும் என்று குபேரனைக் கூட்டி வந்தாரோ என்னவோ! அதிலேயும் இப்போது தேவைப்படுவது ஃபாரின் எக்ஸ்சேஞ்சு. காரணம் கயிலையில் அருள்தான் செலவாணி. இங்கே புழக்கத்தில் உள்ள பணம் அங்கே கிடையாது. எனவே குபேரனைக் கூட்டி வந்தார் போலும்.

இருவருமாக எல்லாத் தலங்களையும் பார்த்து வருகிறார்கள். திருவெண்காட்டை அடைகிறார்கள். அங்கே சுவாமிதரிசனம் செய்கிறார் குபேரன். வெளியே கூட நிற்பவரும் உள்ளே உள்ள சுவாமியைவிட உள்ளே உள்ள வெண்காடர் பால் ஆசை அதிகமாக எழுகிறது. காரணம், கூட வந்தவருக்கு திருமஞ்சனமாட்ட முடியாது. வெண்காடருக்குத் தான் விருப்பம் போல் அபிடேகம் ஆராதனை எல்லாம் செய்யலாம். என்னவோ, குபேரனுக்கு திருவெண்காடர் மீது தனி ஈடுபாடு வந்துவிட்டது.

“என்ன யோசனை! கிளம்பு, கிளம்பு!“ சுவாமி டூரிஸ்ட்காரர்களைப் போலவே துரிதப்படுத்தினார். குபேரன் தயங்கித் தயங்கி நின்றான். சார்! திட்டப்படி நாம இன்னும் நாலைந்து ஊரைப் பார்த்துவிட்டு 2 நாள்ள ஊர் திரும்பணும். உங்களுக்கு வேணுமின்னா நீங்க இங்கேயே அருந்துவிட்டு உங்க இஷ்டம் போல தனியா ஊர் திரும்புங்க என்று டூரிஸ்ட்காரர்கள் தயங்கித் தாமதிப்பவரை அங்கேயே விட்டுவிட்டுச் செல்வது போல சிவபெருமான் கூறினாராம்.ஓ! திருவெண்காட்டில் உனக்கு ஈடுபாடு வந்துவிட்டது போலும்! சரி, குபேரா! நீ இங்கேயே இருந்து விட்டு பின்னால் வா என்று கூறிவிட்டு சிவபெருமான் குபேரனை அங்கேயே விட்டு விட்டுச் சென்று விட்டாராம்.

ஒரு சின்ன ஆசை. ஆதவும் நல்ல ஆசை. ஆசை அறுமின் ஆசை அறுமின், ஈசனோடயினும் ஆசை அறுமின் என்று சிவபோக சாரம் பாடிய திருஞானசம்பந்தர் அற்புதமாக பாடினார். எந்த ஆசையாய் இருந்தால் என்ன? ஒரு ஆசை என்றால் அதற்கு ஒரு பிறப்பு உண்டு.

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ் ஞான்றும்

தவாஅப் பிறப்பீனும் வித்து

என்பார் திருவள்ளுவர். அவா எதுவாயினும் தவறாது அது பிறப்பை விளைவிக்கும் என்றார். திருவெண்காடரை அபிடேகம் சூராதனை எல்லாம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டான் குபேரன். அந்த ஆசைக்கு ஒரு பிறப்பிு. அது தான் பட்டினத்தார். ஒரு சின்ன, அதுவும் நல்ல ஆசைக்கே ஒரு பிறப்பு என்றால் நமக்கு எத்தனை எத்தனை ஆசைகள்! சே! அதுவும் வெளியில் சொல்லக் கூடிய ஆசைகளா! இவற்றிற்கெல்லாம் சேர்த்து நமக்கு எத்தனை பிறவிகள் வருமோ? கொஞ்சம் கூட கவலைப் படாம வாழ்கிற நம்மை என்ன சொல்ல!

இங்கே சுந்தரநாதருக்கு திருவாடுதுறையிலே குபேரனுக்குத் திருவெண்காட்டில் வந்ததைப் போல பசுபதியார் மேல் ஒரு ஆசை—ஒரு ஈடுபாடு வந்தது.

திருவாடுதுறை அவ்வளவு எளிய தலமா என்ன? எத்தனை பெருமை உடையது? திருவாவடுதுறை என்ப திரு+ஆ+அடுதுறை என்று விரியும். திரு—கண்டாரை வியந்து ஈடுபடச் செய்யும் தெய்வத் தன்மை, ஆ—பசு, அடுதல் — அழித்தல். பிறவிக்கடலில் தத்தளிக்கும் ஆன்மாக்களாகிய பசுக்களின் பசுத்தன்மையபைப் போக்கி இறைவனடியைச் சேர்விக்கும் துறைமுகம் திருவாவடுதுறை. எவ்வளவு அற்புதமான பெயர்! இன்று தலப்பெயரெல்லாம் தலைகீழா மாறிப்போச்சு. திருச்சிக்கு பக்கத்தில் லால்குடின்னு ஒர் ஊர். அதென்ன லால்குடி? வடநாட்டு சேட்டுகள் தான்லால் என்று பெயர் வைத்துக் கொள்வாங்க. அங்கே அப்படி ஏதாவது ஒரு சேட்டு வந்து குடி அமாத்தினானா? ஆராய்ந்து பார்த்தால் அந்த

ஊரின் பழைய பெயர் திருத்தவத்துறை. அந்தத் தலத்துப் பெருமானின் பெயர் அழைத்து வாழ்வித்தவர். ஆ! எவ்வளவு அழகான பெயர். அந்த காலத்திலேயே சுவாமியிடம் யாரும் தாகார் போகவில்லை போலும்! இவன் இப்படி கெட்டு ஒழிகிறானே என்று கருணையினால் அறைவனே ஆன்மாக்களை அழைத்து வாழ்வித்தாராம். அம்பிகை பெயர் பெரிய நாயகி. பல தமிழப் பெயர்கள் உருமாறிப் போச்சு. திருவண்ணாமலையில் அம்பிகையின் பெயர் என்ன என்றால் அபிதகுஜாம்பாள் என்கிறான். பேரே வாயில் நுழைய மாட்டேன் என்கிறது. நல்ல தமிழில் உண்ணாமுலையம்மை என்றால் கேட்கிறதற்கு எவ்வளவு இனிமையாக இருக்கிறது? இப்போது திருவாவடுதுறையில் சுவாமிக்குப் பசுபதியார் என்ற பேரில்லை. வேறு எதையோ சொல்லுகிறார்கள். ஆனால் சேக்கிழார் பசுபதியார் செழுங்கோயில் என்றே கூறுகிறார். நாம் சேக்கிழார் வழியே செல்வோம்.

சுந்தரநாதருக்கு பசுபதியார் கோயிலை விட்டு வர மனம் வரவில்லையாம்.

அந்நிலைமைத் தானத்தை அகலாத தொருகருத்து

முன்னியெழும் குறிப்பினால் மூளும்ஆ தரவெய்தப்

பின்னும் அகன் றேகுவார் பேணவரும் கோக்குலங்கள்

பொன்னிநரிக் கரைப்புறவிற் புலம்புலன எதிர்கண்டார்.

ஈர்த்தென்ன ஆட்கொண்ட எந்தை பெருமான் என்ற திருவாசக வாக்கிற்கிணங்க மறுபடியும் பசுபதியார் கோயிலுக்குப் போகிறார். சிந்தை சொடுக்கி இழுக்கிறது. நாம் வந்த பயண நோக்கம் என்ன? அகத்தியரைச் சந்தித்து அவருடன் சில நாள் தங்குவது. சரி! புறப்படு! சிந்தை சீறுகிறது. மனமோ பசுபதியாரிடம் ஒட்டிக் கொள்கிறது. ஒருவாறு மனத்தை தேற்றிக் கொண்டு பின்னும் அகன்று ஏகினாராம் சுந்தரநாதர்.

அவ்வாறு ஏகியவர் பேணவரும் கோக்குலங்கள் பொன்னிநதிக் கரைப் புறவில் புலம்புவன எதிர்கண்டார். காவிரி ஓடிக்கொண்டிருக்கிறழ. அதன் கரையையொட்டி பெரிய மேய்ச்சல் நிலம். புறவு எனபார்கள். புறவு என்றால் முல்லை நிலம். அங்கே மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும். அங்கே சுந்தரநாதர் ஓர் அதிசயக் காட்சியைக் காண்கிறார். மேய வேண்டிய மாடுகள் மேயச் சொல்லாமல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றாக சேர்நது கூடி அழுது கொண்டிருந்தன. கதறின அவற்றின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆக்கள் கதறுவன, சுழல்வன, மோப்பன, அடை சோர்வனவாக தயருற்றன என்று சேக்கிழார் அற்புதமாக சித்தரித்துப் பாடுகின்றார். இப்படி இவையெல்லாம் அழுதுகொண்டும் கதறிக் கொண்டும் இருக்கின்றனவே என்ன விஷயம் என்று மாடுகளை விலக்கி எட்டிப் பார்க்கிறார் சுந்தரநாதர். உள்ளே மூலன் என்கிற அடையன் அறந்து கிடக்கிறான். திடீரெனத்தான் அவன் இறந்திருக்க வேண்டும். அதுவும் அண்மையில் தான் அவன் இறந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த மாடுகள் இவவளவு துயரத்துடன் கதறாது. இவன் இந்த மாடுகளை மேய்ப்பவன் போலும். இவற்றை இவன் நல்ல அன்புடன் பேணியிருப்பான். எனவே மாடுகள் அவன் பிரிவை தாங்காமல் கதறுகின்றன. மேய்க்கிறவன் மாடுகளை அடிஅடின்னு அடிச்சா மாடுகள் அவன் கிட்ட வருமா? இவன் ஏன் திடீரென இறந்தான்?

இந்த இடத்தில் உமாபதிசிவம் ஒரு குறிப்பு கொடுக்கிறார். அவன் ஹார்ட் அட்டாக்கில் இறந்து போனானாம். இதை எப்படி உமாபதசிவம் கூறினார்? பயிலா நோய் என்று கூறினார். சில பேர் பாயும் நோயுமாக நோயுடன் நீண்ட நாள் உறவுடன் இருப்பார்கள். அது போல இல்லையாம். இவன் பெற்ற நோய் பயிலா நோய். அதாவது திடீரெனத் தாக்கிய நோய். எனவே இது தற்காலத்தில் கூறப்படும் மாரடைப்பு நோயாக இருக்கலாம். இது அந்தக் காலத்தில் அதிகம் பயிலா நோய் என்றும் பொருள் கொள்ளலாம்.

சுந்தரநாதர் நினைக்கிறார் பண்பாக மாடுகளை நடத்திய இவன் திடீரென மாரடைப்பு நோயால் இறந்து போயிருக்கிறான். எனவே இந்த் வாயில்லாப் பசுக்கள் கத்திக் கதறி சுற்றிச் சூழ்ந்து தமது துயரத்தை வெளிப்படுத்துகின்றன. ஐயோ! பாவம்! இவன் உயர் பெற்று எழுந்தாலொழிய இந்தப் பசுக்கள் இடர் நீங்கா.

உடனே சுந்தரநாதர் என்ன செய்தால் இந்த பசுக்களின் துயர் நீங்கும் என்று எண்ணிப் பார்க்கிறார். அவருக்கு ஒரு வாய்ப்பு வசதி உண்டு. அட்டமாசித்திகள் சூக்குமமாக அவர் பின்னாலே வருகின்றன என்று சொன்னோமல்லவா. அதில் பரகாயப் பிரவேசம் என்பது ஒன்று. அதாவது கூடுவிட்டு கூடு பாய்வது. இவர் இந்த விலங்கினங்களின் துயர் தீர்க்க எண்ணுகிறார். அறிவின் சிகரமாயிற்றே அவர்.

அறிவிற்கு அடையாளம் என்ன? ஒருவரிடம் எதை வேண்டுமானாலும் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். உங்களுக்கு குழந்தை இருக்க? கேட்கலாம் பதில்வரும். அனால் உங்களுக்கு அறிவு இருக்கா? கேட்கக்கூடாது. கேட்டால் பதில் கிடைக்காது பளீரென விழும் அறையில் பல் தான் கிடைக்கும்.

என்றால் ஒருவருக்கு அறிவு இருக்கா என்று எப்படித் தெரிந்து கொள்வது?

திருவள்ளுவர் கைகொடுக்கிறார். அதற்கு ஒரு அடையாளம் சொல்கிறார். எவன் ஒருவன் பிற உயிர்கள் (உயர்திணை அஃறிணை உட்படயாவும்) படுகின்ற துன்பத்தைக் கண்டு இரக்கம் கொள்கிறானோ அவனுக்கு அறிவு உண்டு என்று தெரிந்து கொள். இல்லையென்றால் அந்த அறிவினால் ஆவதென்ன? என்றார்.

அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்

தந்நோய் போல் போற்றாக் கடை

சுந்தரநாதர் மிகப் பெரிய அருளாளர், மிகப்பெரிய ஞானி. அவர் பெற்ற ஞானம்—அளவிறந்த அறிவு அந்த பசுக்களின் துயரம் தீர்க்கச் சொல்கிறது. இரக்கம் அவரை அங்கேயே இருக்கிறது. நமக்கு ஒரு வசதி இருக்கிறது. அதாவது சுடுவிட்டு சுடுபாய்தல். நாம் ஒரு வேளை இவன் உடலில் புகுந்தோமானால் இந்த விலங்குகளான பசுக்களின் துயர் நீங்க வாய்ப்புண்டு என்று அவர் நினைக்கிறார்

இவன் உயிர்பெற் றெழிலன்றி ஆக்களிடர் நீங்கா என்று

அவன் உடலில் தம்முயிரை அடைவிக்க அருள்புரியும்

தவமுனிவர் தம் உடலுக்கு அரண்செய்து தாம்முயன்ற

பவனவழி அவன் உடலில் தம்முயிரைப் பாய்த்தினார்

சுந்தரநாதர் என்ன செய்ய இருக்கிறார்? மூலன் உடலில் தம்உயிரை காற்று வழி புகுத்திக் கொள்ளப் போகிறார். அதற்கு முன் தம் உடலை பத்திரமான ஒரு இடத்தில் பதுக்கி வைத்துவிட்டு பின் மூலன் உடலில் புகுகிறார். இதை தம் முடலுக்கு அரண் செய்து தாம் முயன்ற பவனவழி அவன் உடலில் தம் உயிரைப் பாய்த்தினார் என்றார் சேக்கிழார். பவனம் வடமொழிச் சொல். பகரத்தை அழுத்திச் சொல்லிக் கூறினோமானால் பவனம் காற்றைக் குறிக்கும் வடமொழியை மிக எச்சரிக்கையாக உச்சரிக்க வேண்டும். இங்கே பவனவழி என்றால் காற்றுவழி என்று பொருள் கொள்ள வேண்டும். பரகாயப் பிரவேசம் காற்றுவழியாகத்தானே நடக்க வேண்டும்?

இப்போது சுந்தரநாதர் மூலன் என்கிற இடையன் உடலில் புகுந்து விட்டார். தற்போது கீழே அருப்பது மூலன் என்கிற அடையன் லேல்லன் சுந்தரநாதர் என்கிற அருளாளர். இந்த இடத்தில் சேக்கிழார் காட்டுகிற நயத்தை என்னவென்நூறு சொல்ல. அவர் பெருமையை எப்படி எப்படியெல்லாம் சொல்லி மகிழலாமே அப்படி அப்படியெல்லாம் சொல்லி மகிழலாம்.

சுந்தரநாதர் மூலன் என்னும் இடையன் உடலில் தம்முயிரைப் பாய்த்திட, பாய்த்தியபின் எழுபவரை மரியாதையோடு திருமூலராய் எழலும் என்கிறார். இதற்கு முன் இந்த இடையனை அறிமுகப்படுத்தும் போது முந்தை முறை நிரை மேய்ப்பான் மூலன் என்னும் பெயருடையான் என்று ஒற்றை விளியாகச் சொல்கிறார். மூலர் என்னும் இடையர் என்று சொல்லவில்லை. மூலர் என்னும் அடையர் என்று சொல்லவில்லை. மூலன் என்னும் பெயருடையான் என்கிறார்.

தற்போது அருளாளர் சுந்தரநாதர் அவன் உடலில் எழுகிறார். மரியாதையோடு திருமூலராய் எழலும் என்கிறார்.

அதிலும் முற்பிறப்பு பெயரான சுந்தரநாதர் பெயரை சேக்கிழார் இந்தப் பாடலில் திருமூலராய் எழலும் என்று கூறும் சரை கூறவே இல்லை . நந்தி திருவருள்பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர் என்று அறிமுகப்படுத்தியதோடு சரி. இதுவரை பெயர் கூறாமலே வரலாற்றைக் கூறிவந்தார். இங்கே தான் முதன் முதலில் திருமூலர் என்று பெயர் கூறினார். இனி, நாமும் சுந்தரநாதன் என்று கூறாமல் திருமூலர் என்றே கூறுவோம்.

இடையனை அறிமுகப்படுத்தும் போது மூலன் என்றும், அவன் உடலில் அருளாளர் புகுந்ததும் மூலர்—திருமூலர் என்றும் இடத்திற்கு ஏற்ப இப்படி ஜாலம் காட்டிப் பாடுவதில் சேச்கிகழார் வல்லவர். இதைப் பல இடங்களில் பார்க்கலாம், உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

நம் எல்லோருக்கும் மனுநீதி சோழன் கதை தெரியும். மனுநீதி சோழன் முன்னால் நிற்கிறான். கன்றை இழந்த மாடு ஒன்று ஆராய்ச்சி மணியை அடித்துவிட்டு முன்னால் நிற்கிறது. இது எதற்காக மணி அடிக்கிறது என்று மந்திரியை கேட்கிறான். மந்திரி பிரதானிகள் எல்லாம் காதரணத்தைக் கூறுகிறார்கள். அந்தக் காரணம் என்னவென்று உங்களுக்கு எல்லாம் தெரியும். உன்னுடைய பிள்ளை தேரோட்ட அந்த தேர்க்காலில் என்னுடைய கன்று சிக்கி அடிபட்டு இறந்துவிட்டது என்பதை அந்தப் பசு சொல்லாமல் சொல்லிக் கண்ணீர் உகுக்கிறது. அதை சொல்ல வந்த சேக்கிழார்.

அவ்வுரை கேட்டவேந்தன் ஆவுறு துயரம் எய்தி

வெவ்விடம் தலைக்கொண்டாற் போல் வேதனை அகத்து மிக்கிங்

கிவ்வினை விளைந்த வாறென்(று) இடருறும் இரங்கும் ஏங்கும்

செவ்விதென் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான்.

என்று பாடுகிறார். இந்த பாட்டு ஒன்றிற்கே கோடி கொடுக்கலாம் சேக்கிழாருக்கு.

எப்படிச் சொல்கிறார் பாருங்கள்! இவ்வினை வந்தவாறு என்னென்று இடருறும், இரங்கும்,ஏங்கும்... முதலில் ஆவுறு துயரம் எய்தி என்று கூறினார். பசுவினுடைய துயரத்தை மனுநீதிச் சோழன் எய்தினானாம். பொதுவாக வழக்காற்றிலே சொல்வோம். ஒரு தலைவலிக்கு இந்தப் பாடுபடுத்துகிறயே. அதற்கு பாதிக்கப்பட்டவன் சொல்வான். என்ன பெரிய தலைவலின்னு நீ சொல்லலாம். தலைவலியும், வயிற்றுவலியும் தனக்கு வந்தால் தெரியும் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

இப்ப பசுவினுடைய துயரைத்தை முழுதாக மனுநீதிச் சோழன் அனுபவித்தா தான் அவனுக்கு அந்த துயரத்தின் அளவு தெரியும். மனுநீதிச் சோழன் அந்தப் பசுவின் துயரத்தை முழுதாக எய்தினானா? ஆமாம்!

எய்தினான் என்கிறார் சேக்கிழார். எப்படி? மனுநீதிச் சோழன் அந்தப் பசுவின் துயரத்தை எய்தி அந்தப் பசுவாகவே மாறிவட்டானாம். பசுவோ அஃறிணை, எனவே பசுவாகவே மாறிவிட்ட மனுநீதிச் சோழன் செய்கைகளை அஃறிணைச் சொற்களாகவே கூறி அவனது உண்மை நிலையைக் காட்ட இடருறும், இரங்னும், ஏங்கும் என்று கூறினார் சேக்கிழார். இடருறுவான், அரங்குவான், ஏங்குவான் என்று கூறினாரில்லை சேக்கிழார். சிறிது நேரத்தில் தெளியும் என்றவர் தெளிந்தவுடன் அவன் மறுபடியும் மனுநீதிச் சோழனாகி விட்டதால் உயர்திணைச் சொல் வைத்து அடுத்து என்ன செய்வது என்று தேறான் என்றார். இப்படி ஒரு புலவரை ஈரேழு உலகத்திலும் பார்க்க முடியாது! வேறு எந்தப் புலவனும் இந்த நுட்பத்தைக் காட்டுந் திறமை எட்டிப் பார்க்க நினைத்துக்கூட பார்க்க முடியாது.

பேரே சொல்லாமல் வரலாற்றை மட்டும் சொல்லி வந்தவர், இடையனை அறிமுகப்படுத்தும் போது மூலன் என்றும் வேன் விட்டுச் சென்ற உடலில் அருளாளர் புகுந்ததும் திருமூலர் என்று மரியாதையோடு கூறும் பாங்கு மேலே மனுநீதிச் சோழன் வரலாற்றில் காட்டிய உதாரணத்தை பெரிதும் ஒத்தது.

ஆக்களைப் பொறுத்தவரை எழுந்தது இடையனா, திருமூலரா, என்று பகுத்துப் பார்க்கத் தெரியாது. அவை தம்மை மேய்ந்த இடையனே எழுந்தான் என்று நீத்த துயரினவாகி நிரந்துபோய் மேய்ந்தன! அவற்றிக்கு ஒரே சந்தோஷம்.

இங்கே பசுபதியார் ஆகிய இறைவன் நினைக்கிறான். ஏற்கெனவே சுந்தரநாதன் இந்த திருவாவாடுதுறையைவிட்டுப் போகாமல் தங்கிவிட வேண்டும் என்று ஓர் எண்ணம் கொண்டான். இந்நிலைமைத்தானத்து அகலாததொரு கருத்து இவனிடம் இருக்கிறது. அதுவுமின்றி இந்த விலங்கினங்களாகிய பசுக்களின் துயரை நீக்க வேண்டும் என்று நினைத்தான். ஆகவே இங்கே ஓர் அவா இவனுக்கு எழுந்துவிட்டது.

அவா என்பது தவாது பிறப்பீனும் வித்து. அப்படித்தானே குபேரன் பட்டினத்தர் ஆகப் பிறந்தான். யாராயிருந்தாலும் நீதி நீதிதான். பெரிய அருளாளர் என்றால் அவர் தவறு பண்ணா அதை ஒத்தக்க முடியுமா? வாரியார் சுவாமி ஒரு பெரிய அருளாளர். அதற்காக வேர் வருமான வரி கட்ட வேண்டாம்னு விட்டு விட முடியுமா? ஒரு பேச்சுக்காக அவரை உதாரணம் சொன்னேன். அதற்காக அவர் கட்டலைன்னு நினைச்சுடாதீங்க. வருமானவரி இலாகாவினர் பணம் கட்டாதவர்களைப் பட்டியல் இட்டுக் காட்டுவர். இதுவரை அவர் பெயர் எந்த பட்டியலிலும் வரவில்லை. எதற்கு சொன்னேன் என்றால் அருளாளர் யாராக இருந்தாலும் தவறு தவறுதான். திருமூலர் எவ்வளவு பெரிய அருளாளர்? அதற்காக ஓர் அவா என்று வந்து விடுமானால் அதற்கென்று நிச்சயமாக பிறப்பு கொடுத்தே ஆக வேண்டும். இதிலிருந்து சற்று முறை மாறினாலும் இறைவன் ஒருதலை பட்சமாக நடந்து கொள்பவர் என்று ஆகிவிடும். இறைவனாகிய எம்பெருமான் நீதி தவறிவிடக் கூடாது. இல்லைன்னா நீதியே திருப்பெருந்துறை மேவிய எம் ஆகியே என்று மணிவாசகர் பாடியது பொய்யாகிவிடும்.

கடவுள் நீதி இல்லாமல் அவருக்கு ஒன்று இவருக்கு ஒன்று என்று நடந்து கொள்வதாய் இருந்தால் என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்? உடனே நாம் என்ன பண்ண ஆரம்பிச்சிடுவோம். கடவுளுக்கே லஞ்சம் கொடுத்துச் சரிபண்ண ஆரம்பித்துவிடுவோம். அரோகரா! அவ்வளவு தான்! உலகத்தையே ஒரு வழி பண்ணிடுவோம்.

எனவே கடவுள் இலக்கணம் என்று ஒன்றைக் கூறுவோமோனால் அவர் நீதியைக் காப்பாற்ற வேண்டும். சுந்தரநாதருக்கு ஓர் அவா வந்தது. ஓர் அவாவிற்கு ஒரு பிறப்பு என்பது நீதி. அதன்படி சுந்தரநாதருக்குப் பிறப்பு கொடுக்கணும். எப்படிக்கொடுக்கலாம் என்று அறைவன் திட்டமிடுகிறான். பிறப்பு என்றால் என்ன? ஓர் உடலில் புகுத்துவது. இங்கே இவனே இன்னோர் உடலில் புகுந்துவிட்டான். ஆகவே இது இவனுக்கு பறிப்பாயிற்று. இனு பழைய சுந்தரநாதன் உடல் தேவை இல்லை. எனவே அதை சுந்தரநாதன் ஒளித்து வைத்த அடத்திலருந்து அவருக்கே ஒளித்து விட்டான் இறைவன். மறைத்து வைத்த உடல் சுந்தரநாதன்

என்கிற பிறவி. இப்போது உள்ள உடலில் இவரை அப்படியே தக்க வைத்ததால் இது திருமூலர் என்கிற பிறவி ஆகிவிடும். எனவே பழைய உடலைக் காணாமற் போக வைத்தார் இறைவன்.

இங்கே ஆக்களின் இடர்பெறாது அதனைத் தீர்க்க மூலன் உடலில் புகுந்தான் இவன். ஆக்கள் என்ற சொல்லுக்கு பசுக்கள் என்று பொருள். பசுக்கள் என்ற சொல் தத்துவரீதியாக உயிர்களைக் குறிக்கும். பச் என்ற வேர்ச் சொல் வடமொழியில் கட்டு என்று பொருள்படும். கட்டுண்டது பசு. அதுபோல் ஆன்மாக்கள் உடலாகிய இநத்க கட்டப்படுவதால் இதனையும் பசு என்பர்.

இந்த இடம் உயிர்களின் பசுத்தன்மையை நீக்குகிற இடம். திரு+ஆ+அடுதுறை. இங்கே அஃறிணையாகிய பசுக்களின் துயரத்தை நீக்கிய இவனே உயர்திணையாகிய பசுக்கள்–ஆன்மாக்களின் துயரம் நீங்கும் வண்ணம் நாம் சொற்பிரிவிலாத பைசந்தி வாக்கில் கூறிய ஆகமத்தை தமிழால் தெளிவு பட எழுதி ஆன்மாக்களுக்கு உதவட்டும் என்று எண்ணகிறான் இறைவன்.

இங்கே திருமூலர் ஆக்களை ஊருக்குள் ஓட்டிச் செல்கிறார். இடையன் மனைவி வந்து இவரை வீட்டுக்கு அழைக்கிறாள். இவர் மௌனம் சாதித்து நகர மறுக்கிறார். அவள் ஓ என்று கூப்பாடு போட்டு ஊர்ப்பெரியவர்களை அழைதம்து முறையிடுகிறாள். அந்தப் பெரியவர்கள் இவரைச் சோதித்து பார்த்துவிட்டு இவர் உன் கணவன் இல்லை உன் கணவனுக்கு சிவயோகத்திற்கும் ரொமப தூரம். இவர் தெளிந்த சிவயோகத்தில் வைத்த கருத்தினராகி, இருக்கிறார். இது பித்துமற்ற மயலன்று சித்தவிகற்பம்களைந்த ஓர் அற்புதமான நிலை. இவர் வரம்பில் பெருமையை உடைய பெரியவராய்த் தெரிகிறார். இவரை விட்டு ஒதுங்குவாயாக என்று வேளை ஆற்றி அனுப்புகிறார்கள்.

திருமூலர் அன்று இரவு அந்த ஊரில் இருந்த மடத்தில் தங்கினார். மடங்கள் எல்லாம் அந்தக் காலத்தில் பெரியவர்கள் தங்குவதற்குத் தகுதியாய் இருந்தன. இரவு தங்கி மறுநாள் காலையில் திருமூலர் தாம் வைத்த தமது பழைய உடலைத் தேடிப் போகிறார்– அதிலே மறுபடியும் பாய்வதற்காக.

அங்கே முந்தை உடற் பொறை காணார். காப்பில் வைத்தது தான். இருந்தாலும் அந்த உடலை அவர் அங்கே காணவில்லை. உடனே சிந்தையினில் வந்த செயல் ஆராய்ந்து தெளிகின்றார். உடனே அவர் டிவியை ஆன் பண்ணிட்டார். இது ஒரு தனி சேனல். யோக சேனல். அதை முடுக்கி விட்டால் யோகக் காட்சியில் முக்காலமும் தெரியும். தமது உடல் எங்கே? என்ன ஆயிற்று? என்ன சமாச்சாரம்? என்று ஆராய்ந்து பார்க்கிறார் அப்போது தான் அவருக்குத் தெரிகிறது இது ஆண்டவன் திருக்குறிப்பு என்று. இந்த இடத்தில் சேக்கிழார் பாடும் பாடல் இருக்கிறதே! ஈடு இணையற்றது! மிக உயர்ந்த பாடல்.

தண்ணிலவார் சடையார்தாந் தந்தஆ கமப்பொருளை

மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்ப

கண்ணியஅத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க

எண்ணிறந்த உணர்வுடையார் ஈசன் அருள் எனவுணர்ந்தார்.

இந்தப் பாடலை அன்பர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். இதில் ஓர் அடிப்படையான பிரச்சினைக்கு விடை சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாளை தமிழாகமம் என்ற தலைப்பில் பார்ப்போம்.

அந்தப் பழைய உடல் சுரப்பிக்கப்பட்டது–அதாவது ஒளிக்கப்பட்டது. திருவருளே அந்த உடலை சுரப்பித்தது. இதை திருமூலர் புரிந்து கொண்டார். எப்படி புரிந்து கொண்டார்? சிந்தையில் ஆராய்ந்து தெளிகின்றார்.

கண்ணிய அகத்திருவருளால் அவ்வுடலைக் சுரப்பிக்க திருவருள் கண்ணியது அதாவது கருகியது என்ன என்பதை முன்னரே பார்த்தோம். நாம் அடைந்த அவாவிற்காக இவ்வுடலிலேயே தங்க வைத்துவிட்டான் இறைவன். பசுக்கள் துயர்நீத்தது போலவே ஆன்மாக்களாகிய பசுக்களின் துயரைப் போக்க ஆகமப் பொருளை தமிழால் வகுக்க பசுத்தன்மை நீக்கி இறைவனது அடியைச் சேர்விக்கும் துறையாகிய திருவாவடுதுறையில் அமர்த்தியுள்ளது இறவைன் திருவருள் என்ற திருவருள் கருத்தை உணர்ந்து அமைதியடைந்து திருவருள் எண்ணப்படி திருமூலர் அங்கேயே தங்கி விடுகிறார். திருவருள் உணர்த்தியபடி செயல்படவும் தொடங்கினார்.

மெய்யன்பர்களே! இந்த இடத்தில் ஒரு முக்கியமான கருத்தை நாம் சிந்தையில் செதுக்கி வைக்க வேண்டும். அது என்ன என்பதைக் கூறுகிறேன்.

திருமுறைகளை தொகுத்த முறை இருக்கிறதே அது ஒரு பெரிய அற்புதமான முறை. பன்னிரு திருமுறைகளை வகுத்தார்களே அதைச் சொல்லுகிறேன். அதற்கு ஓர் உள் அர்த்தம் உண்டு. அது கால அடைவினாலே அமைக்கப்படவில்லை. அதாவது திருஞான சம்பந்தருக்கு முன்னால் பின்னால் என்று எந்தக் கால அடைவிலும் அது அமைக்கப்பட்டது அல்ல. ஞானசம்பந்தையும் திருநாவுக்கரசரையும் ஒப்பிட்டால் திருநாவுக்கரசர் காலத்தால் முன்னே வந்து விடுகிறார். தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண் மதி சூடி என்ற தொடங்கும் பதிகத்திற்கு முன்னால் கூற்றதயினவாறு பதிகம் பாடப்பட்டது. ஞானசம்பந்தருக்கு முன்னால் திருநாவுக்கரசர் அருள்பெற்று தேவாரம் பாடினார். தேவாரம் பாடி தில்லைக்கு வரும் போது தான் திருநாவுக்கரசர் சம்பந்தர் என்னும் குழந்தை அருள் பெற்று பாட ஆரம்பித்ததைக் கேள்விப்பட்டு அந்த ஞானக் குழந்தையைப் பார்க்க செல்கிறார்—வரலாற்றுபடி.

அப்படியானால் எந்த பதிகத்தை முதலில் வைத்திருக்கணும்? முதலில் பாடிய கூற்றாயினவாறு பதிகத்தை தானே முதல் திருமுறையில வைத்திருக்கணும். அப்படி வைக்கவில்லையே. என்ன காரணம்? இந்த அடைவு முறை. உமாபதி சிவம் வேறு ஓர் அடைவு முறையில்

திருமுறைகளைத் தொகுத்து அதற்கு அருள்மொழித்திரட்டு என்று பெயர் வைத்தார். இது இல்லாமல் அகத்தியர் தேவாரத் திரட்டு ஒன்று. ஒவ்வொரு தொகுப்பும் ஒவ்வோர் அடைவில் ஒவ்வொர் பொருளை உட்கொண்டு அமைக்கப்பட்டது. இதை இன்னொரு முறை வாய்க்கும் போது விரிவாக பார்க்கலாம்.

இப்போது இந்த அடிப்டையை மட்டும தெரிந்து கொண்டால் போதும். அதாவது பன்னிரு திருமுறை கால அடைவினால் வகுக்கப்பட்டது அல்ல. இன்னொன்றையும் சொல்கிறேன். பட்டினத்தாரிடம் கணக்குப் பிள்ளையாக வேலை செய்தவர் சேர்ந்தனர். பட்டினத்தர் துறவு பூண்டது முன்னால் சேந்தனார்அவர் அடியொற்றி பின்னால் அருட்பாடல்களைப் பாடினார். பட்டினத்தார் பாடிய பாடல்கள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவருக்குப் பின்வந்த சேந்தனார் பாடல்களோ ஒன்பதாந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. முன் பின்னாக ஏன் வைத்தார்கள்?

இன்னும் ஞானசம்பந்தர்க்கு முன்னால் பாடியவர் காரைக்காலம்மையார். அதனால் தான் அம்மையார் பாடியவற்றிற்கு மூத்த திருப்பதிகங்கள் என்று பெயர். ஆனா அவருக்கு பின் வந்த குழந்தை ஞானசம்பந்தர் பாடியது முதல் திருமுறையாக வைக்கப்பட்டிருக்கிறது. அம்மையார் பாடியதோ பதினோராந் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே பன்னிரு திருமுறைகள் வைக்கப்பட்ட அடைவு முறை கால அடைவு முறை அல்ல என்பதை நன்றாக தெள்ளத் தெளிவாக நாம் நினைவில் வைக்க வேண்டும்.

இதை ஆராய்ச்சி செய்தோமானால் அற்புதக் கருத்துக்கள் வெளிவரும். இதைப்பற்றி அடியேன் ஏற்கெனவே ஒரு கட்டுரை எழுதி அது ஓர் இதழில் வெளிவந்தது. அதை முழுமையாக இப்போது இங்கே பார்த்தோமானால் அது மற்றொன்று விரித்தலாகி விடும்.

இன்னும் ஒன்று சமயாசிரியர்களில் அவரவர் பாடிய பாடல்களைக் கூட பாடியவற்றை பாடியபடியே வைக்கவில்லை. அதாவது முதலில் பாடினது முதலில் இரண்டாவது பாடினது இரண்டாவது என்று வைக்கவில்லை. அதற்கொரு உள் அர்த்தம் உண்டு. பல சைவச் சான்றோர்கள் அதுபற்றிக் கோடி காட்டிச் சென்றிருக்கிறார்கள்.

அவ்வகையில் எங்கள் தாயகத்தில் என்பால் உழுவவன்பு பூண்ட முனைவர் இரத்தின சபாபதி அவர்கள் கூட திருமுறைத்தெளிவே சைவசித்தாந்தம் என்ற நூலை வெளியிட்டுள்ளார். பல பெரியவர்கள் குறிப்புகளைக் காட்டியுள்ளார்கள். அடியேனும் என் பங்கிற்கு சிறிது அதை விரிவு படுத்தியுள்ளேன். கடல் போல விரியும் அந்த ஆய்வில் பொருத்தம் பற்றி ஒரு தேக்கரண்டி முகந்து பார்ப்போம்.

சிவஞான போத முதல் சூத்திரம் என்ன சொல்கிறது?

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்

தோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்

அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இதில் ஆதி அந்தம் என்று சொல்லவில்லை. அந்தமும் ஆதியும் என்று வைக்கிறார். நாமெல்லாம் இது முதலில் இது கடைசியில் என்றுதானே வைப்போம். மெய்கண்டார் பாடும் போது அந்தத்தை முதலில் வைத்தார் ஆதியை பின்னால் வைத்தார். ஏன் இப்படி வைக்கிறார் என்றால் ஒரு பெரிய கருத்தை உள்ளடக்கி ஞானசம்பந்தர் அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல் ஆரழல் அங்கை அமர்நதிலங்க என்று முதல் திருமுறையில் (திருவேட்களம் பதிகம்) பாடுகிறார். இவரே மூன்றாந் திருமுறையிலும் அந்தமாய் உலகுக்கு ஆதியும் ஆயினாய் என்று பாடுகிறார்.

அந்தமே ஆதி என்ற சைவசித்தர்நதக் கருத்து இதிலிருந்து உருவாகிறது. மகா சங்கார காரணனாய் அந்தமாய் உள்ள சிவபரம் பொருளே உலகிற்கு ஆதியாக இருக்கிறது என்பது இதனால் விரித்து உரைக்கப்படுகிறது. ஞானசம்பந்தர் கூறும் இந்த சைவ சித்தர்நதக் கருத்து மெய்கண்டாரால் எடுத்துக் கொள்ளப்பட்டு அந்தம் ஆதி என்மனார் புலவர் என்று பாடப்பெற்றது. ஞானசம்பந்தப் புலவர் எழுத்து எண்ணி படித்த சாதாரண புலவரல்ல. மற்ற புலவரெல்லாம் ஐம்புலப் புலவர்கள். ஞானசம்பந்தர் செம்புலப் புலவர்.

மாணிக்கவாசகரைப் பற்றி திருக்கோவையாருக்கு உரை எழுதப்புகுந்த பேராசிரியர் இதைக் கூறுகிறார். திருக்கோவையாருக்கு பேராசிரியர் உரை மிக உயர்நத உரை. அதற்கு முன்னாலும் ஓர் உரை உண்டு. அதற்குப் பழைய உரை என்பது பெயர். அதற்கு மேலும் சிந்திப்பது பேராசிரியர் உரை. திரைக்கோவையார் பிற புலவர்கள் பாடுவதைப் போல பாடிய நூல் அல்ல. எங்களால் உரை எழுத முடியாது. காரணம் நாங்கள எல்லாம் வெறும் புலவர்கள் ஐம்புலவர்கள். ஆனால் மணிவாசகரோ செம்புலப் புலவர் என்றார்.

அதுபோல சம்பந்தர் செம்புலப்புலவர். இதைக் குறிப்பிட்டுத் தான் மெய்கண்டார் அநதம் ஆதி என்மனார் புலவர் என்று பாடினார். இங்கே குறிப்பிடப்படும் புலவர் செம்புலப்புலவராகிய ஞானசம்பந்தர். இந்தக் கருத்து முதல் திருமுறையில் வருகிறது. அதன் பிழிவாக அமைக்கப்பட்டது சிவஞான போத முதல் சூத்திரம்—தோவது பிரமாண இயலாக இது முதலில் வைக்கப்பட்டது. எனவே திருமுறையின் அடைவு முறையை மெய்கண்டார் நன்கு உணர்ந்தே சிவஞான போத சூத்திரங்களை அப்படையே அமைக்கிறார்,

இதிலிருந்து என்ன தெரிகிறது? இது எப்படி அமையவேண்டும் என்று இறைவனால் உணர்த்தப்பட்டே நம்பியாண்டார் நம்பி முதல் திருமறையை சம்பந்தர் திருமுறையாக அமைத்தார். இந்த கருத்தை உள்வாங்கி பின்னால் வந்த மெய்கண்டார் அந்த அடைவுப்படி சூத்திரங்களை அமைத்துப் பாடினார். எனவே பன்னிரு திருமுறையின் அடைவு சித்தாந்த அடைவுப்படி அமைந்தது.

நாம் என்ன நினைக்கிறோம்? சிவஞானபோதம் பாடிய மெய்கண்டார் பின்னால் வருகிறாரே, நம்பி ஆண்டார் நம்பி அவருக்கு முன் வந்தவரராயிற்றே, இது எப்படி சித்தாந்த அடைவுப்படி அமைக்கப்பட்டிருக்க முடியும்?

இதில் ஒன்றை கவனிக்க வேண்டும். மெய்கண்டார் வேண்டுமென்றால் நம்பி ஆண்டார் நம்பிக்கு பின்னவராய் இருக்கலாம். அதற்காக சைவ சித்தாந்தமே மெய்கண்டாருக்குப் பின்னர்தான் தொடங்கியது என்ன சொல்லலாமா?

சித்தாந்தம் தொல்காப்பியத்தே தொட்ங்கி விடுகிறது. நம்முடைய தமிழ் இலக்கணத்திலேயே சித்தாந்தம் கொடிகட்டிப் பறக்கிறது. மெய்கண்டாரிடம் இருந்து தான் சைவ சித்தாந்தம் தொடங்கியது என்று நாம் நினைத்தால் அது நம் தவறு. தமிழருடைய தொன்னெறி சைவ சித்தாந்தம். அதன் உள்ளே இப்போது நுழைய வேண்டாம்.

சித்தாந்த அடைவு இது என்று கணபதியின் திருவருளினாலே குறிப்பு பெறப்பட்ட நம்பியாண்டார் நம்பி சைவ சித்தாந்த அடைவு முறையில் சமயகுரவர்கள் மற்றும் ஏனைய திருமுறை ஆசிரியர்களின் பாடல்களை வகுத்துத் தந்தார். அதே பொல்லாப் பிள்ளையாரின் அருள்பெற்ற மெய்கண்டார் பின்னால் வந்து இந்தச் சித்தாந்த அடைவை உணர்ந்து அம்முறையில் சிவஞான போத சூத்திரங்களை அமைத்தார்.

சிவஞானபோத கடைசி சூத்திரத்தை அதாவது பன்னிரண்டாவது சூத்திரத்தை எடுத்துக் கொண்டோமானால் அது என்ன சொல்கிறது?

> செம் மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
>
> அம்மலங் கழீஇ அன்பரோடு மரீஇ
>
> மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
>
> ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே

இது அடியார் பெருமையை எடுத்துக் கூறுவது. ஜீவன் முத்தர்களுக்கு அடியார் கூட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துக் கூறுவது இது. திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணம் இது அடியார் பெருமையைக் கூறுவது. இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பணும். பெரியபுராணமாகிய இலக்கியத்தைக் கண்டு பன்னிரண்டாம் திருமுறைக்கு இணையாக பன்னிரண்டாம் சூத்திரமாக அடியார் பெருமைக்கு இலக்கணம் கூறினார். பன்னிரண்டாம் திருமுறைக்கு இணையாக பன்னிரண்டாம் சூத்திரம்.

இப்படி ஒவ்வொரு திருமுறையும் ஒவ்வொரு சூத்திரமாக பரிணமித்தது என்று சொன்னால் அதுவே ஒரு தனி ஆராய்ச்சி உரை ஆகிவடும். முதல் சூத்திரம் முதல் திருமறையின் சாரமாக அமைகிறது. 12ம் சூத்திரம் 12ம் திருமுறையின் சாரமாக அமைகிறது.இதிலிருந்து நாம் ஒன்றை உய்த்துணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

பத்திரிகைச் செய்திகளில் செய்திகளின் முன் ந போட்டு ஒரு கோடு போட்டு ர் என்று பொருள் (ந–ர்) இதற்கு என்ன பொருள்? நமது நிருபர் என்பது பொருள். செய்யுட்களுக்கு உடிை எழுதும் போது இ–ள் என்று போட்டிருக்கும். என்ன பொருள்? இதன் பொருள் என்பதன் சுருக்கம் அது என்பதைப்

புரிந்துகொள்கிறோம். முதல் எழுத்தும் கடைசி எழுத்தையும் போட்டால் மற்றதையெல்லாம் நாம புரிந்து கொள்கிறோம்.

அதுபோல முதல் திருமுறை முதல் சூத்திரமாயிற்று என்றும் 12ம் திருமுறை 12ம் சூத்திரமாயிற்று என்றும் கூறினால் மற்ற திருமுறைகள எல்லாம் அந்தந்த சூத்திரமாயிற்று என்று நாம் புரிந்துகொள்ள மாட்டோமா? அதுவும் அருள்நெறித் திருக்கூட்டத்தார் நிச்சயமாகப் புரிந்து கொள்வீர்கள்.

இந்த முறையில் எட்டாந்திருமுறை மணிவாசகருடையது. அவர் குருத்த மரத்தினடியில் குரு உபதேசம் பெற்றார் அல்லவா? எனவே எட்டாம் சூத்திரம் குரு உபதேசமாக அமைத்தார்.

இப்போது பாருங்கள்! முதல் திருமுறை முதல் சூத்திரமாகிறது 12ம் திருமுறை 12ம் சூத்தரமாகிறது 8ம் திருமுறை 8ம் சூத்திரமாகிறது அந்த முறையில் 10ம் திருமுறையான திருமந்திரமே 10ம் சூத்திரமாயிற்று என்பதை நாம் உணர வேண்டும்.

பத்தாம் சூத்திரம் என்ன சொல்கிறது? அது ஏகனாகி இறைபணி நிற்றலைப் பற்றிப் பேசுகிறது.

நாம் செய்கின்ற செயலை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். அப்படிச் செய்வோமானால் எல்லாம் இறைவனுடைய செயல் ஆகிவிடும். நாம் எதைச் செய்தாலும் இறைவன் என் மூலமாக செய்விக்கின்றான் என்று உணர்ந்து செய்வோமானால் நாம் இறைவனோடு ஒன்றிவிடுவோம். அப்புறம் நமக்கென்று ஒரு செயலுமில்லை.

செய்கிற செயல் எல்லாம் இறைவனுடையது என்று எப்பொழுது ஆகிறதோ அப்போது நம்மைத் தொடரும் வல்வினையும் மாயையும் ஓடி ஒளிகிறது என்று பத்தாம் சூத்திரம் சொல்கிறது.

இப்போது திருமூலர் வரலாற்றிற்கு வருவோம். திருமூலர் திருவாவடுதுறைக்கு வரும் வரை தமக்கென ஒரு செயலை வைத்துக் கொண்டருந்தார். அதாவது நற்றமிழின் பொதியமலையை நண்ணுதற்கு வழிக்கொண்டார். அகத்தியரைப் பார்ப்பதற்கு. ஆனால் இங்கே திருவாவடு துறைக்கு வந்தவுடன் பெயர் மாறிவிடுகிறது. அது மட்டுமல்ல தம் செயலையே கவிட்டு திருவருட்கருத்து இது என்று உணர்ந்து அது இட்ட பணியாகிய தமிழாகமம் வகுக்க அங்கே அமர்ந்து விடுகிறார். இறைவனோடு ஏகனாகி இறைபணியில் நிற்க ஆரம்பித்துவிட்டார்.

இந்த சித்தாந்த அடைவுப்படி தான் ஆண்டுக்கு ஒரு பாடலாக இவர் பாடியருளிய திருமந்திரத்தை பத்தாம் திருமுறையாக வைத்தார்கள். திருமந்திரத்தை திருமூலர் எப்படிப் பாடியருளினாராம். சேக்கிழார் கூறுகிறார்.

ஊன் உடமபிற பிறவிவிடம் தீர்நததுலகத் தோருய்ய

ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை

பான்மைமுறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்

ஏனவெயிறு அணிந்தாரை ஒன்றவன்தான் எனஎடுத்து

பெருமக்களே! திருமந்திரப் பதிப்புகள் பல. உங்களிடத்தில் பல பதிப்புகளும் இருக்கலாம். திருப்பனந்தாள் மடம் பதிப்பு ப.இராமநாதப்பிள்ளை பதிப்பு வரதராசன் ஐயா அவர்கள் வெளியிட்ட பதிப்பு தருமபுர ஆதீனப்பதிப்பு திருவாவடுதுறை ஆதீன பஞ்சாட்சர தீப உரைப் பதிப்பு. திரு. வன்மீகநாதன் ஒன்று பதிப்பித்திருக்கிறார்கள். இப்படி பல. எல்லாவற்றிலும் பார்ததோமானால்,

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

என்று விநாயகர் காப்புப் பாடல் ஒன்று பதிப்பித்திருப்பார்கள். இமு திருமூலர் பாடியதில்லை. இதை முதலில் தெரிஞ்சுக்கணும் இந்தப் பாடல் விநாயகர் காப்பாக வேறு யாரோ பாடி பின்னால் சேர்த்தது.

திருப்பனந்தாள் மடம் பதிப்புப் படி இப்போது கிடைக்கும் மிகைப்பாடல்களோடு சேர்த்தால் திருமந்திரம் மொத்தம் 3081 பாடல்கள். கிடைக்கின்ற இந்த 3082 பாடல்களில் உள்ளே நுழைந்து பார்த்தால எந்தப் பாடலிலும் திருமூலரால் விநாயகரைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இதிலிருந்து திருமூலர் காலத்தில் விநாயகர் வழிபாடு இல்லை என்று தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

முருகனைப் பற்றி திருமந்திரத்தில் 3 பாடல்கள் உள்ளன. ஐயப்பனைப் பற்றி பாடல் உண்டு. லட்சுமியைப் பற்றி, சரஸ்வதியைப் பற்றிப் பாடல்கள் உண்டு. ஆனால் ஒரு பாடல் கூட விநாயகரைப் பற்றி இல்லை. 3081 பாடல்களில் ஒரு பாடல் கூட விநாயகரைப் பற்றி இல்லை என்பதை தெரிந்து கொள்கிறோம். திருவாசகத்திலும் விநாயகர் கூறப்படவில்லை.

இது வரலாற்று உண்மை. அவ்வளவுதான். அதனால் விநாயகரை வழிபடக்கூடாது என்பதில்லை. சம்பந்தரே விநாயகரைப் பாடியுள்ளார். எனவே விநாயகர் வழிபாடு தோன்றியநாள் எப்படியானாலும் அது வழிபட வேண்டிய மூர்த்தம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அடியேன் பிள்ளையார் போற்றி நானூறு என்று ஒரு நூலே யாத்து வெளியிட்டிருக்கிறேன்.

இனி சிவபுராணம் மணிவாசகரால் பாடப்பட்டது. அதற்கு மேலும் சிவபுராணம் என்ற தலைப்பிற்கு கீழும் சிவனது அநாதி முறையைக் குறித்தது என்று எழுதி இருக்கும். திருவெம்பாவையிலும் சத்தியை வியந்தது என்று குறிப்பிட்டிருக்கும். இந்தக் குறிப்பு யார் கொடுத்தது? தெரியாது. சில பதிப்புகளில் அபியுத்தர் என்று போட்டிருக்கும்.

மணிவாசகர் சொல்லச் சொல்ல சிவபெருமான் திருவாசகத்தை எழுதினார் என்பது வரலாறு. மணிவாசகர் சிவபுராணம் என்று சொல்லி பெருமான் அதை உடனே எழுதிக் கொள்ள பிறகு அவர் நமச்சிவாய வாழ்க என்று தொடங்கும் போது இறைவன் கொஞ்சம் நிறுத்துங்க என்று கூறி சிவனது அநாதி முறைமையைக் குறித்தது என்று எழுதவில்லை. சிவபுராணம் என்று எழுதிவிட்டு நமச்சிவாய வாழ்க என்பதை தான் எழுதினார். பிறகு யாரோ ஒரு அபியுத்தர்—அபியுத்தர் என்றால் வடமொழியிலே பெயர் தெரியாத ஒருவர் என்று பொருள்—மக்கள் இதன் பொருளைப் புரிந்து கொள்ளட்டுமே என்று சிவனது அநாதி முறைமையைக் குறித்தது என்று எழுதினார்.

அது போல திருமந்திரத்தை எழுதிக்கொண்ட ஒருவர்—ஒர அபியுத்தர்—பின்னால் இந்த திருமந்த்திற்கு ஒரு காப்பு இருந்தால் நன்றாயிருக்குமே என்று சேர்த்து தான் இந்த ஐந்து கரத்தனை என்று தொடங்கும் பாடல்.

இது திருமூலர் பாடியது இல்லை என்பதற்கு தெளிவான ஆதாரம் என்ன? சேக்கிழார் திருமூலர் திருமந்திரத்தை ஒன்றவன் தானே என எடுத்துப் பாடினார் என்று பாடியிருப்பதே தெளிவான சான்று.

திருமூலர் திருமந்திரத்தை–மூவாயிரந் தமிழ் என்னும் மந்திரத்தை பாடினார் என்பது ஒரு புறம் இருக்கட்டும்.அந்த மூவாயிரம் பாடல்களையும் எப்படிப் பாடினாராம்? ஓர் ஆண்டுக்கு ஒரு பாடல் என்ற முறையில் மூவாயிரம் பாடல்களைப் பாடினாராம். திருமந்திரத்தைப் பாடி முடிப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகள் ஆயிற்றாம். சேக்கிழார் கூறுவதைக் கேளுங்கள்.

முன்னியஅப் பொருண்மாலைத் தமிழ்மூவா யிரம்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி அணிந்தார்தம் திருவருளால் திருக்கயிலை
தன்னில் அணைந் தொருகாலும் பிரியாமை தானடைந்தார்.

வாரியார் சுவாமிகள் ஒரு கருத்தைச் சொல்வார்கள் நீ ஒரு கருத்தைச் சொல்கிறாய் என்றால் அந்த கருத்து மிகச்சிறப்பாக அமையவேண்டுமானால் அது உன்னுடைய மனதில் ரொம்ப நாள் ஊறியிருக்கணும். ரொம்ப நாள் ஊறின ஊறுகாய் தானே நல்லாயிருக்கும். அதுபோல நீ சொல்லும் கருத்து உன் சிந்தையுள்ளே பல நாள் ஊறி இருக்குமானால் அது சிறப்பாக அமையும்.

அது போல திருமூலர் தாம் பாடிய ஒவ்வொரு பாடலையும் ஓராண்டு சிந்தையுள்ளே ஊறவைத்து உலகுக்கு உதவினார்.

3000 ஆண்டு இப்புவி மேல் மகிழ்ந்திருந்து மந்திரத்தைப் பாடு. அதன் பிறகு என்னுடன் வந்து இரு என்பது இறைவன் திருவுள்ளம்.

மன்னியமூ வாயிரத்தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்தது அதன்பின் திருக்கயிலை தன்னில் அணைந்து ஒரு காலும் பிரியாமை தான் அடைந்தார் என்பது சேக்கிழார் வாக்கு. இதன் மூலம் சேக்கிழார் திருமூலரைப் பற்றி நமக்கு கொடுக்கிற அறிவிப்பு. அவர் இப்புவி மீது 3000 ஆண்டுகள் இருந்தார் என்பது. சேக்கிழாரின் அறிவிப்பை அப்படியே நாம் எடுத்துக் கொள்வோம் என்பது திருமுறை அன்பர்களாகிய நம் கொள்கையாக இருக்க வேண்டும்.

திருமுறைகளில் மிகவும் ஈடுபாடு உடையவராகத் தம்மைச் சொல்லிக் கொண்டு குறிப்பாக சேக்கிழார் பாடல்களில் மிகவும் ஈடுபாடு உடையவராகச் சொல்லிக் கொண்டு சேக்கிழாருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், மாநாடு நடத்திக் கொண்டு சிலர், சார் இதை நம்ப முடியலையே சார். எப்படி சார் மூவாயிரம் ஆண்டு இருந்திருப்பார்? என்று கேட்கிறதை நம் காதுகள் கேட்டிருக்கும்.

சேக்கிழார் சொல்வதை எல்லாம் ஏற்றுக்கொண்டு மேற்கோள் காட்டிப் பேசுவோம். ஆனால் இதை ஏற்றுக் கொள்ள மாட்டோம்னா அதற்கு என்ன பொருள்? அப்புறம் ஏன் சேக்கிழாருக்கு மாநாடு? திருமுறைகளில் ஈடுபாடு உடையவர்கள் முதலில் அதை நம்பணும். நம்பிக்கையில்லாமல் அல்லது பாதி நம்பிக்கையுடன் ஒன்றை ஏற்றுக் கொள்வதா? இல்லை அதில் கருத்து வேறுபாடு இருக்கிறதென்றால் துணிவுடன் வேறு எதிர் முகாமிற்கு சென்று நேர்மையுடன் எதிர்த்துப் பேச வேண்டும். இது என்ன கூட இருந்தே குழி பறிக்கிற வேலை?

பாடியது யார்? சேக்கிழார்–தெய்வச் சேக்கிழார். உலகெலாம் என்று தொடங்குவது இறைவனோட வாக்கு. நாம் அவ்வளவு தான் என நினைக்கிறோம். மறைமலை அடிகளுடைய ஆசிரியராக இருந்த சூளை சோமசுந்தர நாயக்கர் இதுபற்றி ஒரு தனிக்கட்டுரையே எழுதி இருக்கிறார். எட்டு புள்ளி அளவில் அச்சில் 40 பக்கம் அந்தக் கட்டுரை வரும். கையில் எழுதினால் இன்னும் நிறைய பக்கங்கள் வரும்.

சூளை சோமசுந்தர நாயகர், சைவ சண்ட மாருதம் என்று பெயர் பெற்றவர். அவர் சொல்கிறார் பெரிய புராணம் **4286** பாடல்களும் நடராசப் பெருமானுடைய வாக்கு. சேக்கிழார் பாடியது என்று சொல்லாதே என்பார். இதற்கு தர்க்க ரீதியாக பல காரணங்கள் காட்டுகிறார். பலபட ஆராய்ச்சி செய்து கூறுகிறார்.

உலகெலாம் என்று இறைவன் தொட்ங்கினான் என்றால் அதை எப்படி முடிக்கணும்னு இறைவனுக்குத் தானே தெரியும் என்று கேட்கிறார். நான் என் முன்னே உள்ள குடிநீர் பாட்டிலைக் காட்டி இந்த பாட்டிலை என்று சொல்ல ஆரம்பிக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கப்புறம் என்ன சொல்லப் போகிறேன் என்பது எனக்குத்தான் தெரியும். நான் தொடங்கி அப்படியே நிறுத்திவிட்டால் இந்தப் பாட்டிலை? என்ன பண்ணச் சொல்றீங்க என்று அன்பர்கள் முகம் கேட்கும் கேள்விதான் எழுமே ஒழிய நான்சொல்வந்ததை திரு. சண்முகம் சொல்ல முடியுமா? அது போல உலகெலாம் என்று ஆரம்பித்த கடவுளுக்கு தான் தெரியும் அதை எப்படி முடிக்க வேண்டும் என்று. அவர்தானே சொல்லி முடிக்கணும் கடவுள் சொல்ல வந்ததை நாம் சொல்லி முடிக்க முடியுமா?

உலகெலாம் என்பதை கடவுள் அசரீரியாக வெளியே சொன்னார். மற்றவற்றை சேக்கிழார் உள்ளிருந்து சரீரியாகச் சொன்னார் என்று இப்படி பல காரணங்களைக் காட்டுவார் சூளை சோமசுந்தர நாயக்கர் அவர்கள். எனவே பெரியபுராணம் தெய்வ சாந்நித்தியம் உடையது சிவபெருமானுடைய சாந்நித்தியம் உடையது. அந்த வாக்கில் திருமூலர் மூவாயிரந் ஆண்டு இருந்து மூவாயிரம் மந்திரம் மொழிந்தார் என வருகிறது. இதை தொட்டுப் பேசி தொடர்ந்து மாநாடுகள் நடத்தி அப்புறம் இதை நம்ப மறுத்தால் என்ன பொருள்? இது தவறு அல்லவா?

நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. இனி திருமூலர் காலம் இருக்கிறதே அதைப்பற்றி சிந்திக்க வேண்டிய காலம். இன்று திருமந்திரமாகிய மூவாயிரந் தமிழ் முகிழ்த்து விட்டது. தோற்றுவாய் செய்து விட்டோம். இனி திருமூலர் காலத்தை சிறிது சிந்தனை செய்து சொற்பொழிவை நிறைவு செய்வோம்.

திருமூலர் எந்த காலத்தைச் சேர்ந்தவர்? அவர் எப்படி **3000** ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்திருக்க முடியும் என்பதே நாம் இப்போது மேற்கொள்ளும் சிந்தனை.

கால வரலாற்றைக் தெரிந்து கொள்ளவில்லையானால் எதையுமே தீர்க்கமாக தெளிவாக எடை போட இயலாது. பல உண்மைகள் தடம்புரண்டு போய்விடும்.

திருமூலர் தம் கால வரலாற்றை திருமந்திரத்தில் தாமே கூறியிருக்கிறார். நந்தி அருள்பெற்ற நாதனை நாடிடில் என்றும் கைலாயப் பல்கலைக்கழகம் என்று முன்னே பார்த்தோமல்லவா? அதை ஆராய்ந்தால் அவருடைய காலம் தெளிவாகும்.

நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம் என்பது அவர் வாக்கு. கைலாயப் பல்கலைக் கழகத்தில் நந்தி திருவருள் பெற்றவுடன் அவருக்கு கிடைத்த பட்டம் நாதன் என்பது. அதற்கு முன் அவரது இயற்பெயர் சுந்தரன் என்பது. இதனை எதனால் அறிகிறோம் என்றால் தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம், சுந்தரன் ஆகமச் சொல் மொழிந்தானே என்பது குருமட வரலாறாக அவர்தம் சீடர்கள் பாடியதிலிருந்து அறிகிறோம். ஆகவே சுந்தரன் என்கிற அருளாளர் நந்தி திருவருள் பெற்று நாதன் என்ற பட்டம் பெற்று சுந்தரநாதன் ஆகி பொதிய மலை நோக்கிப் புறப்பட்ட பயணத்தில் மூலன் என்னும் இடையனது உடலில் புகுந்ததால் திருமூலர் ஆனார் என்று உறுதி செய்கிறோம்.

இப்போது கிடைக்கும் திருமந்திரப் பதிப்புகள் எல்லாம் ஒன்று போல இல்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக உள்ளது. பாயிரத்தில் வர வேண்டிய பாடல் ஐந்தாம் தந்திரத்திலும், ஐந்தாம் தந்திரத்தில் வரவேண்டியது முதல் தந்திரத்திலும் என்று இப்படி ஒரு தந்திரத்தில் வரவேண்டியது வைப்புமுறை மாறி இன்னொரு தந்திரத்திலும் வருகிறது. இதில் பதிப்பிற்கு பதிப்பு வேறுபாடு. பொதுவாக செய்யுளில் வரும் சொல் மாறிவருவதைப் பாடபேதம் என்பார்கள். பாடலே பேதமாவது திருமந்திரத்தில் தான்

அளவற்ற பேதங்கள். அவரவர்க்குத் தோன்றியவாறு பதிப்பித்திருக்கிறார்கள். இவ்வளவு பேதங்கள் இருப்பதிலிருந்து என்ன தெரிகிறது? இதைப் பல பேர் கையாண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதுல் ஒரு திருப்தி ஏற்படுகிறது. ஆனால் தோன்றியாவாளெல்லாம் பாட பேதங்களையும் பாடல் பேதங்களையும் அமைத்துப் பதிப்பித்து விட்டார்களே என்பதில் ஒரு மனக்குறை ஏற்படுகிறது.

இந்த மலேசிய அருள்நெறி திருக்கூட்டம் 43 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் அற்புதமான பழைமையான திருக்கூட்டம். இத்திருக்கூட்டம் அறிஞர்களைக் கூட்டி ஆலோசனை செய்து எது முன் வரவேண்டும் எது பின் வரவேண்டும் என்பதைத் தீர்மானித்து காரணம் காட்டி ஒரு திருமந்திர செம்பதிப்பைச் செய்ய முன் வரவேண்டும் என்பது அடியேனுடைய விண்ணப்பம்.

இனி பாடலுக்க வருவோம். நந்தி அருள்பெற்ற நாதனை நாடிடின் என்று பாடியவர் அவர்கள் யார் யார் என்று விவரிக்கின்றனார். நந்திகள் நால்வர்—அதாவது சனகர்,சனந்தனர்,சனாதனார்,சனற்குமாரர். அதன் பின்னால் சிவயோக மாமுனி அப்புறம் மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர் பிறகு சுந்தரநாதனோடு சேர்ந்து மொத்தம் எட்டு பேர்.

இதில் என்னோடு சேர்த்து இவர் எண்மர் என்று கூறியவர் மன்று தொழுத பதஞ்சலி என்று ஒரு அடைமொழியை ஏதோ ஒரு காரணம் பற்றிக்கூறி பதஞ்சலியை எடுத்துரைத்தார். இந்த பதஞ்சலி மன்று தொழுத பதஞ்சலி என்றால் வேறு பதஞ்சலிகளும் இருக்கிறார்கள் அவர்களில் ஒருவராக இவரை நினைத்து விடாதே! இவர் மன்று தொழுத பதஞ்சலி என்று பிரித்துக் காட்டவே அப்படிக் கூறுகிறார். இந்தப் பதஞ்சலியின் காலத்தைக் கண்டு பிடித்துவிட்டால் திருமூலரின் காலம் தெரிந்துவிடும்.

இனி மொத்தம் எத்தனை பதஞ்சலிகள் இருப்பார்கள் என்று பார்த்தோமானால் இதற்கு விடை கிடைத்து விடும். நாம் பல இடங்களில் தவறுவதற்கே இது தான் காரணம். ஒரே பெயரில் பலர் இருந்தால் எல்லோரையும் ஒன்றாகவே நாம் தப்புக் கணக்கு போட்டு விடுகிறோம்.

ஔவையார் என்று எடுத்துக் கொள்வோமானால் வெவ்வேறு காலத்தில் மொத்தம் 9 ஔவையார்கள் இருந்திருக்கிறார்கள் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் நீல மணிமிடற்றொருவன் போல மன்னுக பெரும நீயே என்று பாடிய சங்ககால ஔவையாரும் விநாயகர் அகவல் பாடிய ஔவையாரும் ஒன்று என்று நினைக்கிறோம். அந்தப் பாடல் காலத்தால் எவ்வளவு முந்தியது? அதனுடைய நடை என்ன? விநாயகர் அகவல் நடை என்ன? பலவிதத்தில் அதுவேறு இது வேறாக இருக்கிறது. ஆனால் ஔவையார் என்ற ஒரே பேர் சொல்லப்படுவதனால் இரண்டையும் ஒரே ஔவையார் பாடியதாக நினைக்கிறோம்.

இப்படித்தான் பதஞ்சலி என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தோர் பலர் இருக்கிறார்கள். ஒரு பெரியவர் இவரைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். டாக்டர் ஏ.பி. கீத் என்பது அவர் பெயர். வடமொழியில் மகாபஷ்யம் செய்த பதஞ்சலி வேறு என்றும் யோகசூத்திரம் எழுதிய பதஞ்சலி வேறு என்றும் கூறுகிறார்.

பாஷ்யம் செய்த பதஞ்சலியின் காலம் கி.மு.210 என்று வரையறுக்கிறார். சிலர் கி.மு. 150 என்றும் கூறுவர். (கூட்டத்திலிருந்து ஒருவர் பி.சி. 215 எனடறு கூறுகிறார்) நீங்கள் படித்த புத்தகத்தில் பி.சி. 215 என்று போட்டிருக்கிறார்களாத? சரி! விட்டுவிடுங்க! பாவம், 5 வருடம் தானே! போனா போகிறது என்று விட்டு விடுங்கள்!

ஆக கி.மு. 210ல் பாஷ்யம் செய்த பதஞ்சலி ஒருவர் மற்றவர் யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலி. இவரது காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யோக சூத்திரத்தை வைத்துக் கொண்டு நாம் யோகம் என்பதே வடமொழியில் தான் முதன் முதலில் வந்தது என்று கூறலாமா? இந்நூல் வந்தது ஏழாம் நூற்றாண்டு என்றால் அதற்கு முன் வந்த திருமுறை நூல்களிலேயே யோகத்தைப் பற்றிக் காண்கிறோமே. தொல்காப்பியத்திலேயே தாபதபக்கம் என்று விவரிக்கும் போது யோகத்தின் எட்டு உறுப்புகளும்

கூறப்படுகின்றனவே. இன்னும் சொன்னால் மிகப்பிற்பட்ட காலத்தில் வந்த யோகசூத்திரத்திரல் கடவுளுக்கே இடமில்லை. அதாவது பதஞ்சலி முனிவர் எழுதிய யோக சூத்திரத்தில் கடவுளுக்கே இடமில்லை. அங்கே 25 தத்துவங்களோட முடிஞ்சுப் போகும்.ஆனால் சைவர்களாகிய நாம் 36 தத்துவங்களைத் தாண்டி இறைவனை அடைய வேண்டும் என்பார்கள்.

பதஞ்சலி முனிவர் பாடிய யோக சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு யோகமதம் என்றே ஒரு மதம் இருக்கிறது. அது சாங்கிய மதத்துடன் இணைத்தே பேசப்படுகிறது, சாங்கிய யோகம் என்றே பேசுவார்கள். இதை எல்லாம் இந்த அருள்நெறி திருக்கூட்டத்தில் தான்ஸ்ரீ ஐயா அவர்கள் சித்தாந்த வகுப்பு எடுக்கும் போது குறிப்பிட்டிருப்பார்கள். அவர் சொல்ல நீங்களும் கேட்டிருப்பீர்கள்.

இப்படி வேதத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் சில அதீத மதங்கள் உதித்தன. இந்த மதங்களை வைதீக மதங்கள் என்பர். இவற்றை புறச்சமயம், அகப்புறச்சமயம் என்றொல்லாம் கூறும் 4 வகைகளில் புறச்சமயத்தில் சேர்ப்பது சித்தாந்த மரபு.

புறச்சமயத்திலே வருவது சாங்கியயோகம், நியாயவைசேடிகம் என்பன போன்றவை. இரண்டும் சேர்ந்து சேர்ந்தே வரும். ஆனால் ஒன்றிற்கொன்று சிறுபான்மை வேறுபாடு. ஆனாலும் சாங்கியயோகம் நியாய வைசேஷிகம் என்று சேர்த்துக் கூறுவதற்குக் காரணம் இவை ஒவ்வொன்றிற்கும் நெருக்கம் அதிகம். இவைகளில் ஆராய்ந்து பார்த்தோமானால் இறைவனுக்கு இடமே இல்லை. இங்கே பேசப்படும் யோகம் இருக்கிறதே அது கடவுளை இல்லை என்று கூறுவதில்லை. கடவுள் இல்லை என்பது நாத்திகம். கடவுளை ஏற்றுக் கொள்வது ஆத்திகம். இதற்கு இடையில் கடவுள் இருந்தா இருந்துட்டுப் போகட்டும் எனக்கொன்றும் ஆட்சேபம் இல்லை என்ற அளவில் கடவுளை ஏற்பது. இந்த நிலையை எடுத்தவர்கள் யோக மதத்தினர். அதாவது யோகசூத்திரத்தில் எழுதிய பதஞ்சலி முனிவரும் அவரைப் பின்பற்றுபவர்களும். இந்த யோகத்தை,சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்று சைவசித்தாந்தம கூறும் நான்கு நெறிகளில் ஒன்றான யோகத்துடன் சேர்க்கலாமா? நாம் முதலில் இதில் தெளிவடைய வேண்டும். சைவம் கூறும் யோகம் மிகப் பெரிய பரம்பொருள் நிலையிலே அமைவது. இது ஒரு புறம் இருக்கட்டும்.

இருவேறு பதஞ்சலிகளைப் பார்த்தோம். இவர்களை வைத்துக் குழம்பிவிடக்கூடாது என்பதற்காக தாம் கூறும் பதஞ்சலி யார் என்று விளக்கிக் கூறுகிறார் திருமூலர். அதாவது நான் சொல்வது மன்று தொழுத பதஞசலி என்கிறார்.

இந்தப் பதஞ்சலி திருக்கூத்து தரிசனம் செய்தவர். பதம்சலியாமல் எ்பபோதும் தரிசனம் இன்றும் செய்துகொண்டிருப்பவர் என்று புராணங்கள் கூறுகின்றன. இவரைப்பற்றிறய விவரத்தை ஆராய்ந்தோமானால் இவரோடு கூட வந்த வியாக்ரமர் வசிட்டவரின் தங்கையை மணந்தவர் என்றும் இவருடைய திருக்குமாரர் தான் உபமன்னியு என்றும் புராணங்கள் கூறுகின்றன. வசிட்டருடன் வடநாட்டில் இருந்த பதஞ்சலிக்கும் தில்லைக் கூத்தை தரிசிக்க வேண்டும் என்று ஆவல் எழுகிறது. தில்லைக்கு வியாக்ரமர் தம் குழந்தையான உபமன்னியுவுடனும் மனனைவியுடனும் வருகிறது அப்போது நடராசர் திருவுருவம் இருந்தததாக தெளிவான வரலாறு கிடையாது. அங்கே திருமூலநாதர் என்ற இலிங்கமே இருந்தது. வியாக்ரமருக்கும் பதஞ்சலியார்க்கும் பின்னால் திருக்கூத்து தரிசனம் கிடைக்கிறது. இவர்களுக்கு பின்னே தான் நடராசர் திருவுருவம் பிரபலமாக அங்கே வழிபடப் பெறுகிறது என்பர். இது எந்த அளவிற்கு உண்மை என்பது நாம் அறிவதற்கில்லை. உமாபதிசிவம் கோயிற் புராணத்தில் கூறுவது இதுவே.

வியாக்ரமரின் குழந்தையான உபமன்னியு குழந்தை வட நாட்டில் வசிட்டருடன் இருந்த போது காமதேனுவின் பால் குடித்து வளர்ந்தது. இங்கே தில்லையில் காமதேனுவிற்கு எங்கே போக? நான் இப்போது இங்கே மலேசியாவிற்கு வந்திருக்கிறேன். சென்னையில் நான் சாப்பிட்டது ஆவின் பால். இங்கே நான் சாப்பிடுவது மாவின் பால் ஒத்து வருமா? அதுபோல உபமன்னியு குழந்தை காமதேனு பாலே வேண்டும் என்று அழுகிறது.

வியாக்ரமர் கூத்தரசரை வேண்டுகிறார். நடராசப் பெருமான் காமதெனுவின் பால் எதற்கு? பாற்கடலையே இங்கு கொண்டு வந்து விடுகிறேன் என்று பாற்கடலை தில்லைக்கு வரவழைத்தாரம். இதை உமாபதிசிவம் புராணத்தில் கூறுகிறார். அது ஒரு புறமிருக்க இதற்கு திருமுறைச் சான்றும் இருக்கிறது. பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற் கடல் ஈந்த பிரான் என்பது சேந்தனார் பல்லாண்டு வரிகள். இதிலிருந்து இந்தப் பதஞ்சலி—வியாக்ரமர் யார் என்பதை உறுதி செய்து கொள்கிறோம்.

அதாவது இந்த பதஞ்சலி மன்றதொழுத பதஞ்சலி வசிட்டருடைய காலத்தினர். வசிட்டவர் எந்த காலத்தைச் சேர்ந்தவர்? தசரதனுடைய காலத்தைச் சேர்நதவர். அவனுடைய அவையில் இராஜரிஷியாக இருந்தவர். தசரதன் காலம் தெரிந்தால் பதஞ்சலி காலம் தெரிந்துவிடும். பதஞ்சலி காலம் தெரிந்தால் திருமூலர் காலம் தெரிந்துவிடும்.

தசரதன் இராமனுடைய தந்தை. எனவே இராமாயணத்தை எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்று ஆராய்ந்து அறிந்தால் இதற்கு விடை கிடைத்துவிடும்.

இராமாயண காலத்தை விஞ்ஞான ரீதியாக இரஷியர்கள் ஆராய்ந்து அறுதியிட்டிருக்கிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறதா? உங்களுக்கும் என்க்கும் இராமாயணத்தில் இருக்கும் ஈடுபாட்டைவிட ரஷியர்களுக்கு ஈடுபாடு அதிகம். ரஷியாவில் இதுவரை 10,000 முறை இராமாயணத்தை மேடை நாடகமாக நடித்துக் காட்டப்பட்டிருக்கிறது என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இப்படி நம் ஊரில், செய்திருப்போமா என்பது கூட சந்தேகம்தான். 10,000 முறையாக இராமாயணம் நடிக்கப்பட்டபோது அதை ஒரு பெரும் விழாவாகக் கூட கொண்டாடினார்கள். இத்தனைக்கும் ரஷியா நாத்திக நாடு. எங்கள் ஊரில் நாத்திகர்கள் இராமாயணத்தைக் கொளுத்தினார்கள்.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியற் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நேரம். செம்பியன் என்று தன்பெயரை தூய தமிழ்ப் பெயராக மாற்றி வைத்தக் கொண்ட ஒரு ரஷியர் வருகை தந்தார். அப்போது தமிழ்த்துறை தலைவராக இருந்த திரு.லெப.கரு. இதைமநாதம் செட்டியாரிடம் சந்தித்துப் பேசினார். நானும் அந்த ரஷியரைச் சந்தித்துப் பேசினேன். அவர் சில ஆவணங்களை எங்களிடம் காட்டினார்.

கிஷ்கிந்தா போன்ற இடங்களுக்கு அநரில் சென்று பார்த்து அங்குள்ள பாறைகளை எல்லாம் விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து பார்த்த ஆவணங்கள். டிகம்போசிஷன் தியரி, கார்பன் தியரி என்பன போன்றவற்றின் அடிப்டையிலர் ஆராய்ந்து பார்த்த அவர்கள் அதன் முடிவில் இராமாயண காலம் கி.மு. 5000 என்று கூறுகிறார்கள். பல வரலாற்றுப் பேராசிரியர்கள் இதில் பலபடக் கூறினாலும் அவர்கள் சொல்வதெல்லாம் ஊகங்களின் அடிப்படையிலே எழுந்தவைதான். ஆனால் ரஷியர்கள் சொல்வது விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே இது மறுக்க இயலாத ஒன்று.

இத ஒருபுறம் இருக்கட்டும். அருட்செல்வர் ந.மகாலிங்கம் அவர்கள் டேட் ஆஃப் ஸ்ரீராமா என்று ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். நரசிங்கராவ் என்கிற பொறியாளர் சோதிட ரீதியாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார். இராமனுடைய ஜாதகம் வான்மீகி இராமாயணத்தில் கொடுக்கப்பட்டிக்கிறது. அந்த ஜாதகப்படி கிரகங்கள் அமைய வேண்டுமானால் எத்தனை வருடத்திற்கு முன்னால் அப்படி அமைந்திருக்க முடியும்? ஆராய்ச்சி செய்கிறார் ஆசரியர். கிடைத்த இராமனுடைய ஜாதகத்தை வைத்து பின்னோக்கி போனால் இராமனுயைட பிறந்த தேதி கிடைக்கும் அல்லவா?

எனக்கு இப்போது வயது 50. தான்ஸ்ரீ ஐயாவிற்கு 70. ஒவ்வொருவருக்கும் பிறந்த தேதி உண்டு. இராமருடைய பறிந்த தெதியை ஆராய்ந்த இந்நூலாசிரியர் அது 11—2—கி.மு. 4433 என்று முடிவிற்கு வந்துள்ளாதிதர். இது எந்த அளவிற்கு உண்மை என்பதை அப்புறம் பார்ப்போம்.

இப்போது இரண்டு காலங்கள் கிடைக்கின்றன. ரஷியர்களின் கணக்குப்படி இராமாயண காலம் கி.மு. 5000 மேலே சொன்ன நூல்படி கி.மு.4433. அந்த காலத்தில் வாழ்ந்தவர் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாக இருந்தார்கள். எனவே இதைமனுக்குத் தந்தை–அவருக்கும் மூத்தவரான வசிட்டர் என்று கணக்கிட்டுப் போவதானால் கி.மு. 5000 என்ற ரஷியர்கள் கணக்கே சரிவரும் என்று தோன்றுகிறது. எனவே இதன்படி பார்த்தால் திருமூலர் காலம் கி.மு. 5000 என்று ஆகும். இதை வேறு ஏதாவது ஒரு ஆதாரத்துடன் ஒத்திட்டு உறுதி செய்ய வேண்டும். அதுவே சரியான வழி.

திருமூலரைப் பற்றி நமக்குத் தெரிந்த இன்னொரு செய்தி அவர் அகத்தியரைச் சந்திக்க வந்தவர் என்பது. இந்த அகத்தியரின் காலம் தெரியுமானால் ஒத்திட்டுப் பார்த்துக் கொள்ளலாம். அனால் அது எவ்வளவு எளிதான காரியமாகத் தெரியவில்லை. காரணம் அகத்தியர் என்ற பெயரிலே பல்வேறு காலங்களில் பலபேர் இருந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு அகத்தியர். இதைப் பட்டியலிட்டோமானால் அது இப்படி அமையும்.

1. திரிபுராதிகள் காலத்தில் இருந்த பொதியமலை அகத்தியர் அல்லது குற்றால முனி அல்லது குறுமுனி.

2. பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர் அகத்தியர்.

3. சூரபன்மன் காலத்தில் இருந்த வாதாபி அகத்தியர்.

4. பரசுராமர் காலத்தில் இருந்த குடகுமலை அகத்தியர் அல்லது குடமுனி.

5. இராமாயண காலத்தில் தசரத இராமருக்கு உதவியாய் இருந்த பஞ்சவடி அகத்தியர்.

6. பாரத காலத்தில் இருந்த உலோபா முத்திரையை மணந்த துவாராபதி அகத்தியர்.

7. பவுத்த மதத்தைச் சேர்ந்த அகத்தியர்.

8. சித்தர் குழுவைச் சேர்ந்த சித்த அகத்தியர்.

9. வைத்திய முறையில் கைதேர்ந்த அகத்தியவேள்.

10. காம்போதி நாட்டு யசோதியை மணந்த அகத்தியர்.

பரசுராமர் காலத்தில் அவருக்கு உதவி செய்த அகத்தியர் தமிழர். அவர் பொதியமலையில் இல்லை. குடகுமலையில் இருந்தார். சுருக்கமாக அவரை குடமுனி என்று அழைப்பார்கள். குடகு–குட–என்று சுருங்கிற்று. உடனே இவர் குடத்திலிருந்து பிறந்தவர் என்று கதை கட்டி விட்டார்கள். இன்னொரு முனிவர் குறுமுனி. குறு ஆலம் குற்றலமாயிற்று. குற்றாலத்தில் வாழ்நததால் இவரைச் சுருக்கமாக குறுமுனி என்று அழைத்தார்கள். குற்றால முனி குறுமுனியாகி பின்னால் கட்டைவிரல் அளவு குறியவர் என்று கதை கட்டிவிட்டாக்ள. பாவம்! அவர் இவர்களிடம் மாட்டிக் கொண்டு அகத்தியர் கட்டைவிரல் குள்ளனாக்கப்பட்டார்.

உலோபா முத்திரையை மணந்த அகத்தியர் மகாபாரத காலத்தில் வந்தவர். ஆனால் எல்லா அகத்தியருக்கும் ஒன்றுபோல உலோபா முத்தரையை மனைவியாக சித்தரிக்கிற கொடுமையை என்ன சொல்ல!

இதைப்பற்றியெல்லாம் விரிவாக ஆராய்ச்சி செய்து ஒரு நூலைச் செய்தார் அமரர் துடிசைகிழார். அகத்தியர் என்பது அந்நூலின் பெயர். அதில் பொதியமலை அகத்தியர் காலம் கி.மு. 6000 என்று குறிப்பிடப்படுகிறது–காரணங்கள் காட்டி இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எனவே நமக்குக் கிடைக்கிற திருமூலர் காலம் பொதியமலை அகத்தியர் காலக் கணக்குப்படி கி.மு. 5000. இரண்டு கணக்கும் துல்லியமானவை என்று கூறிவிட முடியாது. சற்று முன் பின்னாக இருக்கலாம். எனவே இரண்டு காலக் கணக்கற்கும் இடையில் திருமூலருடைய காலத்தை கி.மு. 5500 என்று வைத்துக் கொள்ளலாம்.

இன்னும் கூட பல முகமாக இதை ஆராய்ந்து உறுதிப்படுத்தலாம். நான் எல்லாவற்றையும் எடுத்துரைக்க காலம் தடையாய் இருக்கிறது. சென்னை சைதாப்பேட்டையில் திருமந்திரத்தை சனி தோறும் சிந்தித்து வருகிறோம். திருமூலருடைய காலத்தைப் பற்றி மட்டும் ஆராய 4 நாட்கள் ஆயின. எனவே காலத்திற்கேற்ப இங்கே இரண்டே இரண்டு அதிலும் அவை திருமூலர் வாக்கின்படி—கிடைத்தவை கொண்டு ஆராய்ந்து அமைந்திருக்கிறோம்.

எனவே திருமூலர் காலம் கி.மு. 5500 என்று வைத்துக் கொண்டோமானால் சிலர் அவ்வளவு பின்னோக்கி இருக்குமா என்று சந்தேகப்படுகிறார்கள். சிலருக்கு, ஏன், பலருக்கு இந்த உலகம் ஏசுகிறிஸ்து பிறந்த பின தான் உருவாகியது என்று எண்ணிக் கொள்கிறார்கள். அண்மையில் செய்தித்தாளில் ஒரு செய்தி வந்தது டைனோசர் என்ற அழிந்து போன ஒரு விலங்கினத்தின் எலும்பு ஒன்று அகப்பட்டதாம். அதை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து பார்த்து அந்த எலும்பு 8 கோடி ஆண்டுகட்கு முன்னது என்று அறுதியிட்டிருக்கிறார்கள்.

எட்டு கோடி ஆண்டுகட்கு முன்னமேயே உலகம் இருந்திருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆனால் பலருக்கு கிறிஸ்து பிறப்பதற்கு முன் சில ஆயிரம் ஆண்டுகளைக் கணக்கிட்டுச் சொல்லும் போதே மலைப்பு ஏற்படுகிறது. இதை என்ன சொல்ல?

எனவே திருமூலர் கி.மு. 5500 என்று எடுத்துக்கொள்வோமானால் வேர் பொதியமலைக்குப் புறப்பட்டு வந்த காலத்தை ஒரு ஐம்பது ஆண்டுகளைத் தள்ளி வைத்தோமானால் கி.மு. 5500 என்று ஆகும். அதன் பின் திருவாவடுதுறையில் அவர் தங்கிய காலம் 3000 ஆண்டுகள்.

ஒருவரைப் பார்த்து உங்கள் வயசு என்ன என்று கேட்டால் 50 அல்லது 70 என்று கூறலாம். ஒருவர் என்னுடைய வயசு 3050 என்று சொன்னால் கேட்கிறவன் கதி என்ன ஆகும்? பயந்து போக மாட்டானா?

இதை எப்படி சார் நம்பறது என்பான். அவ்வாறு இருந்தவரை தோவது 3050 வயசு வரை இருந்தவரை நேரடியாக பார்க்கவில்லை. அதனால் நம்ப முடியவில்லை. ஆழ சிந்தித்துப் பார்த்தோமானால் இதற்கு விடை கிடைக்கும். நம்முடைய சிற்றறிவு கொண்டு அருளாளர்களை அறிய முடியுமா?

அடியேன் வாரியார் சுவாமிகள் தலைமையேற்று தொடக்கிவைத்த வேலூர் வள்ளிமணாளர் திருப்புகழ் பாராயண சங்கத்தின் செயலாளர். இந்த அமைப்பு அண்மையில் தான் 50 ஆண்டு நிறைவெய்தி பொன்விழா கொண்டாடியது. இந்த அமைப்பு ஆண்டுதோறும் வள்ளி அவதாரம் செய்த இடமான வள்ளிமலையில் தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு முன்னாள் படிவிழா கொண்டாடுகிறது.

வாரியார் சுவாமிகள் அடிக்கடி சொல்வார். ஒரு முஸ்லீம் எப்படி தம் வாழ்நாளில் எப்படியாவது மெக்காவிற்கு ஒரு முறையாவது தரிசிக்கச் செனஎ்று வருகிறறானோ அது போல சைவன் ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு முறையாவது வள்ளிமலை சென்று தரிசிக்க வேண்டும். அப்போது தான் பிறந்த பிறவியின் லட்சியம் ஈடேறும் என்பார்.

இங்கே உள்ள மலேசிய அன்பர்கள் விரும்பினால் நான் மனமகிழ்ச்சியோடு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தயாராய் உள்ளேன்.

ஒரு பெரியவர் தவம் செய்ய இமய மலைக்குப் போனார். அவரை அங்கே ஒருவர் கூப்பிட்டார். தமிழ்நாடா? என்றார். ஆமாம் என்றார்.

தமிழ்நாட்டில் எந்த இடம்?

தொண்டைநாடு

எதற்கு இங்கே வந்துள்ளாய்?

தவம் செய்ய

அட பாவி! தமிழ் நாட்டில் இதைவிட உயர்ந்த மலை வள்ளிமலை இருக்குது. அதை விட்டுவிட்டு இங்க ஏன் வந்த அங்கே ஏற்கெனவே பல தவசிகள் தவம் செய்து கொண்டிருக்காங்க. அங்கே போய் தவம் செய் போ!

இது உண்மையில் நடந்த நிகழ்ச்சி. இதில் வள்ளிமலைக்குப் போ என்று நெறிப்படுத்தப்பட்ட சுவாமிகள் தான் மறைந்த விடோபா மடம் இராமலிங்க சுவாமிகள்.

இன்றைக்கும் கூட அங்கே பல தவசிகள் சூட்சுமமாக தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். பல விதமான மாநாடுகள் நிகழ்ச்சிகள் அங்கே நடக்கும். நிகழ்ச்சிகள் முடிந்ததென்றால் அவரவர் அவரவர் ஊரக்குத் திரும்பிவிட வள்ளிமலை மறுபடியும் ஏகாந்தமாக இருக்கும். யாரும் இருக்கமாட்டார்கள். அப்படி பல நேரம் அடியேன் வள்ளிமலையில் ஓரிருவருடன் தங்கி இருந்ததுண்டு. இரவு 2 மணிக்கு எழுந்து பார்த்தால் மலை மேலிருந்து வீணை வாசிப்பத கேட்கும். யாரோ பாடுவது கேட்கும். அந்த நேரத்தில் ஒலி பெருக்கியும் கிடையாது. மலைமேல் அந்த நேரத்தில் யாரும் போவதற்கும் வாய்ப்பில்லை. ஆனால் பாடுவதும் வீணை வாசிப்பதும் கேட்கும். எனக்கு மட்டுமல்ல, என்னுடன் கூட இருப்பவர்களும் கேட்டுஅதிசயித்திருக்கிறார்கள். இதற்கு என்ன பொருள். யாரோ சில தவசிகள் சூக்குமமாக அங்கே மலைமேல் குழுமி வழிபாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தானே அதற்குப் பொருள்

எனக்கு இப்போது வயது 50. என்னுடைய தந்தையார் 60 வருடமாக இந்த வள்ளிமலையில் பல திருப்பணிகளைச் செய்தார். எனக்கு முன் எனது தந்தையார் மறையும் வரை அவரே வள்ளிமணாளர் திருப்புகழ் பாராயண சங்கத்தின் செயலாளாராய் இருந்தார், வாரியார் தலைவர்.

அங்கே மலைமேல் முருகன் கோயிலுக்குச் செல்ல சுமார் 750 படி இருக்கும். படித்திருப்பணி எனது தந்தையார் தான் செய்தார். படித்திருப்பணி பாதியில் இருக்கும் போது ஒரு நாள் என் அப்பா வேலூரில் தனது நித்திய பூசையை செய்து கொண்டிருந்தார். வள்ளிமலையிலிருந்து ஒருவன்(வள்ளிமலைக்கும் வேலூருக்கும் சுமார் 18 கி.மீ.) வேலூருக்கு மூச்சிறைக்க வந்து எனது தந்தையாரைப் பார்த்து ஐயா! என்றான். என்னப்பா என்று கேட்டால் அவனால் முழுமையாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏதோ விபரீதம் நடந்தது என்று தனது தந்தையார் சில முக்கியஸ்தர்களைச் கூட்டிக்கொண்டு அவனுடன் காரில் வள்ளி மலைக்குச் சென்றார். அங்கே சென்று பார்த்தால் படித்திருப்பணியில் வேலையாட்களைக் காணோம். சுமார் 250 படிக்குப் பின்னால் மேலே படிபோடத் தோண்டியிருக்கிறார்கள். உள்ளே பெரிய பாறைபோல இருக்கிறது. அந்த இடத்தைக் கடப்பாரையால் தோண்டும் போது குபுகுபு என்று இரத்தம் வந்திருக்கிறது. தோண்டியவன் மூர்ச்சையாகி விட்டான். அதன் பிறகு அந்த இடத்திலிருந்து புகை வந்திருக்கிறது.

பின்னால் உரிய ரெவின்யூ அதிகாரிகளை அழைத்துக் கொண்டு போய் அந்த இடத்தைப் பார்த்தால் ஒரே புகை மயம். சற்று உள்ளே எட்டிப் பார்த்தால் பள்ளத்தின் உள்ளே ஒருவர் தாடிசடையுடன் உட்கார்ந்திருக்கிறார். அப்படியே மூடுன்னு அவர் சைகை செய்தார்.

எல்லோருக்கும் வியப்பு! அவர் யார்? எப்போது அங்கே தவத்தில் உட்கார்ந்தார்? இன்னும் உள்ளே இவரைப் போல எத்தனை பேர் இருக்கிறார்கள்? தெரியவில்லை. இவர் எந்த நாளிலே வந்து உட்கார்ந்தார்? காலம் சொல்ல முடியுமா? உள்ளே இன்னும் பல பேர் இருக்கக்கூடும் என்று சொன்னோமே அவர்களின் காலம் தெரியுமா? எத்தனை ஆயிரம் ஆண்டுகள் முன்னர் தவத்தில் அமர்ந்தவர்களோ?

இப்படி இன்றைய நாளிலேயே நம் கண்முன்னே காலம் தெரிந்து கொள்ள முடியாமல் பாறைக்குக் கீழே அருளாளர்கள் இருக்கிறார்களே, இவர்களுக்கே காலம் சொல்ல முடியவில்லையே!

மறுநாள் வைத்திய பூபதி திரு. அப்பாதுரை என்ற பெரியவரின் கனவில் ஒரு சாமியார் வந்து மேலே அப்படியே பாறையை மூடிவிட்டு படித்திருப்பணியை சஞ்சலப்படாமல் தொடருங்கள் என்று கட்டளை இட்டாராம். அதன்படி அந்த இடத்தில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டு மேலே படிகள் போடப்பட்டன. ஆண்டுதோறும் படிவிழாவிற்கு வாரியார் சுவாமிகள் அங்கே வந்து அந்த மண்டபத்தில் அமர்ந்து கந்தரனுபூதி பாராயணம் செய்துவிட்டு மேலே திருப்புகழ் பாராயணம் செய்து படி விழாவை நிறைவேற்றுவார்.

அந்த மண்டபத்தின் கீழே அமர்ந்திருந்த தவசி எந்த காலத்தில் அமர்ந்தவர்? யாருக்குத் தெரியும். இந்த யுகமா அல்லது கிருத யுகமா? எந்த யுகம்னு யார் சொல்றது?

கண் முன்னால் கண்ட இதுவே சான்று பகரும் போது திருமூலர் ஏன் 3000 ஆண்டுகள் தவமிருந்திருக்க முடியாது? 3000 ஆண்டுகள் வாழ்வது பொது மக்களாகிய நாம பாரதது தான். அதனால் நமக்குச் சந்தேகம் எழுவதும் இயல்பே. ஆனால் அது பாராததுதானே தவிர இயலாததல்ல என்பதை இப்போது பார்த்த இந்த வள்ளிமலைச் சம்பவமே சான்று கூறும்.

இன்னும் ஒரு வரலாற்றைக் கூறுகிறேன். ஒரு முனிவர் ஒரு மலைமேலிருந்து கீழே இறங்கி வந்தார். நல்ல தவசி. என்ன காரணமோ தெரியவில்லை கீழே இறங்கி வந்தா. பசி யாருக்கும் உண்டு. அருந்தபசிக்கு அருந்த பசி. சுற்றிலும் காடு. வீடு எங்கும் இல்லை. எங்கோ ஒரு தொலை தூரத்தில் ஒரே ஒரு குடிசை தென்பட்டது. அங்கே போனார். அங்கே குடிசையில் ஒரு குடியானவனும் அவன் மனைவியும் இருந்தனர். கைதட்டி பசிக்கிறது என்றார். பார்த்த பார்வையிலேயே குடியானவனும் அவனது மனைவியும் இவர் ஒரு பெரி ய மகான் என்று புரிந்து கொ்ணடார்கள். அன்பினாலேயே அவரைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். வலம் வந்து காலில் விழுகிறார்கள். முனிவர் இதையெல்லாம் நிறுத்துப்பா என்பது போல கைகாட்டி மறுபடியும் கையேந்துகிறார். அவருக்கு ரொம்ப பசி என்பதை இருவரும் உயர்கின்றனர். ஏழைகள்! என்ன பண்ணுவார்கள் பாவம்! அவர்கள் வீட்டில் களிதான் இருந்தது.

களி தெரியுமா களி! மலேசியாவில் களி எங்கே தெரியப் போகிறது! மலேசியா வளப்பத்தினாலே களி (மகிழ்ச்சி) உடையது தின்னக் களி உடையதா என்று தெரியவில்லை. இருந்தாலும் சொல்கிறேன் எங்க நாட்டில் ஏழைகளும் சர்க்கரை வியாதி வந்த செல்வச்சீமான்களும் சாப்பிடுவது களி. களியோடு கோங்குராவ் என்றொரு கீரையை உரிய முறையில் சமைத்து தொட்டுக் கொண்டு சாப்பிட்டா அவ்வளவு நல்லாயிருக்கும்!

குடியானவன் மனைவி குடிசைக்குள் சென்று பார்த்தாள். எப்போதோ செய்து வைத்த களி மிச்சம இருந்தது. அதன் மேல் பக்கம் எல்லாம் உலர்ந்து கெட்டி தட்டிப்போயிருந்தது. பாவம் ஏழை வீட்டில் ஃபிரிட்ஜா இருக்கும்? அவள் கொஞ்ச நேரத்தில் கீரையைத் தயார் செய்து களியையும் கீரையையும் கொண்டு வந்தாள். காய்ந்த பாகத்தை நீக்கிவிட்டு களியையும் கீரையையும் முனிவர் கையில் இட்டாள்.

முனிவர் கீரையை அதிகமாகவும் களியை கொஞ்சமாகவும் சாப்பிட்டார். காரணம் கீரை சுவையாக இருந்தது. எஞ்சியிருந்த களிக்குத் தொட்டுக் கொள்ள முனிவர் மறுபடியும் கீரை என்றார். அந்தப் பெண் எங்கே போவாள்? மறுபடியும் முனிவர் காலில் விழுந்து கொஞ்சம் பொறுமையாக இருந்தால் சிறிது நேரத்தில் கீரையைப் பக்குவப்படுத்தித் தருவதாக கீரையைப் பறிக்கச் சென்றாள்.

முனிவர் பாதி களியைக் கையில் வைத்துக் கொண்டு தியானத்திற்குப் போய்விட்டார். சிறிது நேரத்தில் அந்தப் பெண் கீரையைச் சமைத்துக் கொண்டு வருவதற்குள் முனிவர் தியானத்தின் மேல் நிலைக்குப் போய்விட்டார். சமாதி நிலைக்குப் போய் விட்டார்.

குடியானவனும் அவன் மனைவியும் முனிவரைத் தூண்டித் தூண்டி எழுப்புகிறார்கள். முனிவர் நிட்டை கலைந்த பாடில்லை.

தூங்குகிறவனை எழுப்பினால் மெத்தையைச் சுருட்டி அதன் மேல் கொஞ்ச நேரம் தூங்குவான். அதுபோல தியானத்திலே இருந்தவர் சிறிது விழித்து மீண்டும் தியானத்திற்கே சென்று விட்டார். அவரை யார் எழுப்புவது?

காலச் சக்கரம் சுழன்றது. நாள் மாதமாயிற்று. மாதம் வருடம் ஆயிற்று. வருடம் யுகமாயிற்று. எத்தனை யுகங்கள் சென்றிருக்குமோ தெரியவில்லை. மணல் மேடாகி விட்டது.

பல யுகங்கள் சுழிந்தன. ஒரு மன்னரும் மந்திரியும் படைகளுடன் அந்தப் பக்கமாக மணல் பரப்பில் சென்று கொண்டிருந்தனர். மன்னன் தேரில் செல்கிறான். சூரியன் அஸ்தமிக்கும் நேரம். இரவு வருமுன் அண்டையிலுள்ள ஏதாவது ஓர் ஊரை அடைந்து விட வேண்டும் என்று மன்னரும் மற்றவரும் விரைகிறார்கள். தேர்ப் பாகன் தேரை வேகமாக ஓட்ட முயற்சிக்கிறான். ஆனால் குதிரை ஓரிடத்திற்கு மேல் போகாமல் காலை தூக்கிக் கனைகிறது. மன்னது தேர்க்குதிரை மட்டுமல்லாது உடன வந்த எல்லாக் குதிரைகளும் இப்படியே கனைக்கின்றன.

மன்னன் அறிவுடையன் விலங்கினங்களும் நம்மைவிட கூர்மையான புலன்கள் உண்டு என்று எண்ணிப் பார்க்கிறான். புயல் வருவது நமக்குத் தெரியாது ஆனால் விலங்கினங்கள் இதனை முன்னமே உணர்ந்து இடம் பெயர்ந்துவிடும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்த மன்னன், இந்த இடத்தில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும் இந்த இடத்தைத் தோண்டிப் பாருங்கள் என்று கட்டளை இட்டான்.

தோண்டிப் பார்த்தால் ஓரிடத்தில் ஒரு சாமியார் உட்கார்ந்திருக்கிறார். எல்லோருக்கும் மெய் சிலிர்த்தது. மன்னன் அடியற்ற மரம்போல கீழே விழுந்து சாமியாரை வணங்கினான்.

சாமியார் கண் விழித்துப் பார்த்தார். கீரை எங்கே?

மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. மறுபடியும்

சாமியார் கேட்டார் கீரை எங்கே?

சாமி! என்ன கேட்கிறீங்கன்னு புரியலையே மன்னன் அலங்க மலங்க மெல்லிய குரலில் இழுந்தான்.

அப்பா, நீ தானப்பா களி கொடுத்தாய். உன் மனைவி கீரை கொடுத்தாள். நான் கொஞ்சம் களியைச் சாப்பிட்டு விட்டு மறுபடியும் கீரை கேட்டேன். உன் மனைவி கொடுப்பதாக சொன்னாளே!

மன்னன், வேறு யாராவது இவருக்குக் களி கொடுத்தார்களோ என்று சுற்று முற்றும் பார்த்து யாரும் இல்லாததால் அலங்க மலங்க விழித்தான். உடனே முனிவர் மன்னவனைத் தொட்டு தமது அருளாற்றலைப் பாய்ச்சினார். அவனுக்கு இப்போது பழைய காட்சியெல்லாம் தெரிந்தது.

அப்பா! நீதான் அந்தக் குடியானவன். எனக்குக்களி கொடுத்த காரணத்தால் இப்பிறவியில் மன்னனாகி விட்டாய். இடையில் யுகங்கள் உருண்டோடி விட்டன என்றார்.

இங்கே பார்த்தோமானால் பல யுகங்கள் சில நொடிகளாகின்றன. நமக்கு பல ஊழிகள் அருளாளர்க்கு அவை சில நொடிகள்.

அதுபோல திருமூலருக்கு **3000** நொடி நமக்கோ அவை **3000** ஆண்டுகள்.

இன்னும் புரியும்படி சொல்கிறேன். நான் சென்னையிலிருந்து இங்கே மலேசியாவிற்கு வருகிறேன். அங்கே உள்ள நேரத்திற்கும் இங்கே உள்ள நேரத்திற்கும் ஏறத்தாழ **2.1** மணி நேரம் வித்தியாசம். அங்கே

கட்டியிருநத அதே கடிகாரம் தான். அது ஒழுங்காக ஓடும் கடியாரம் தான். இங்கே வந்து இறங்கியவுடன் விமானத்தில் நேரத்தை 2 மணி நேரம் கூட்டி வைத்துக் கொள்ளுஙஙகள் என்கிறான். இடம் வித்தியாசப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை சென்னையிலிருந்து மலேசியாவிற்கு வரும் பயண நேரம் ஒன்று தான். ஆனால் மலேசியாவில் பயண நேரத்துடன் 2 மணி நேரம் கூட்டிக் கொள்ள வேண்டி இருக்கிறது. இரவு 1.00 மணிக்குப் புறப்பட்டேன். பயண நேரம் 3,00 மணி நேரம். எனது கடிகாரப்படி விடியற்காலை 4.00 மணி ஆகிறது. ஆனால் மலேயாவில் நேரம் 6,30 என்று காட்டுகிறது. எனவே காலம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. அருளாளரிடத்தில் அது ஒன்றாகவும் நம்மிடத்தில் அது ஒன்றாகவும் இருக்கிறது.

இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கின்ற விஞ்ஞான அதிசய உண்மைகளைக் கண்டுபிடித்தவன் விஞ்ஞானி ஐன்ஸ்டின். அவனுக்கு முன்னால் உலகைப் பிரமிக்க வைத்த விஞ்ஞானியான நியூட்டனின் முன் மேருமலையாக விஸ்வரூபம் எடுத்த விஞ்ஞானி ஐன்ஸ்டின், உலகை அரண்டே இரண்டில் அடக்கி விடலாம் என்றான். ஒன்று இடம் மற்றது காலம். இதை நுணுக்கமாக ஆராய்ந்தவன் ஐன்ஸடின் ஆராய்ந்து அவன் கண்டுபிடித்த விஞ்ஞான உண்மைகள் உலகையே திடுக்கிடச் செய்தன. அதன் அடிப்படையிலே தான் இப்போது வானவெளியில் ராக்கெட்டுக்களைப் பறக்க விடுகிறோம்.

அவன் கண்டு பிடித்த கண்டுபிடிப்புகளில் ஒன்றைப் பார்ப்போம். ஒளியை அவன் எடுத்துக் கொண்டான். ஒளியின் வேகம் இருக்கிறதே அது தான் இந்தப் பிரபஞ்சத்தின் அதிக பட்ச வேகம். ஒரு விநாடிக்கு 1,86,000 மைல். நான் ஒரு பொறியாளன். எனவே எங்கள் முறைப்படி கூறுகிறேன்—அதாவது விநாடிக்கு 3+10 பவர் 10 சென்டிமீட்டர். இந்த வேகத்திலேயே நம்மால் பயணம் செய்யமுடியுமா? முடியாது.

இங்கே எல்.ஆர்.டி. என்று கூறுகிறார்கள். இது வேகமாகச் செல்லும் என்கிறார்கள். எங்க நாட்டிலே இது பெரிய வேகமில்லை. அதைவிட வேகமாகவே தாயகத்தில் தொடர்வண்டிகள் செல்கின்றன. இந்த வேகத்தையே பெரிதாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் பயணம் செய்வதை நம்மால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஆனால் ஒளியின் வேகம் அது தான்.

இந்த ஒளியின் வேகத்திற்கு மேல் போக முடியுமா? முடியாது என்று நிரூபித்தான் ஐன்ஸ்டின். மேலே போக முயற்சித்தால் என்ன ஆகும்? ஒளியின் வேகத்தில் அது வந்து அடங்கி விடுமாம். இதுதான் ஒளியின் தனித்தன்மை. இவ்வாறு தனக்கு மேல் செல்ல முடியாததால் தானோ என்னவோ கடவுளை ஒளியாகவே நம்முன்னோர்கள் காட்டினார்கள்.

சரி! ஒளியின் வேகத்தில் ஒரு ராக்கெட்டை மேலே அனுப்பினால் என்ன ஆகும் என்று ஐன்ஸ்டின் ஒரு கணக்கு போட்டுக் காட்டினான். இந்த ராக்கெட்டில் ஒருவனை உள்ளே வைத்து அனுப்புகிறோம் என்று வையுங்கள். அவனுக்கு 30 வயது என்று வைத்தோமானால் இவன் திரும்பி வருவதற்குள் இவனுடைய பேரனுக்கு 90 வயது ஆகி இருக்குமாம். வேடிக்கைக்கோ விளையாட்டுக்கோ சொல்ல வில்லை. விஞ்ஞான ரீதியாகச் சொல்கிறான்.

ராக்கெட்டில் சென்று வர பயண நேரம் 3 மாதம் ஆகியிருக்கும் என்று வைத்துக்கொண்டால் உள்ளே பயணம் செய்தவனுக்கு 30 வயது 3 மாதம் ஆகியிருக்கும். ஆனால் அவன் பூமியில் இறங்கும்போது பல ஆண்டுகள் கழிந்திருக்கும். அவன் பேரனுக்கே 90 வயது ஆகியிருக்கும் என்றால் மூன்றாவது தலைமுறைக்கே 90 வயது ஆகிவிடுகிறது. ஒரு தலைமுறைக்கு 30 ஆண்டுகள் என்றால் ராக்கெட்டில் பயணம் செய்தவனின் பிள்ளைக்கு 30 ஆண்டுகளில் அவன் பேரன் பிறந்தான் என்று வைத்தோமானால் அவனுக்கு 90 வயதையும் கூட்ட மொத்தம் 120 ஆண்டுகள் பூமியில் கழிந்துவிடும். ராக்கெட்டில் உள்ளவனுக்கு பயண நேரம் 3 மாதமாக இருக்க பூமியில் அதே நேரத்தில் 120 ஆண்டுகள் ஓடிவிட்டிருக்கும்.

எதுபோல என்றால் விமானத்தில் பயணம் செய்த எனக்கு பயண நேரம் 3 மணி ஆனாலும் மலேசியாவைப் பொறுத்தவரை சென்னையில் புறப்பட்ட நேரத்தையும் மலேசியாவில் இறங்கிய நேரத்தையும் கழிக்க பயண நேரம் 5 மணி ஆவதைப் போல.

இந்தப் பின்னணியில் ததிருமூலர் யோகத்தில் இருந்த ஆண்டுகளைப்ப பார்ப்போம். யோகத்தில் திருமூலர் எதனோடு ஒன்றுகிறார்? ஆண்டவனாகிய அருட்பெருஞ்சோதியில் ஒன்றுகிறார். அது ஒளி அல்லவா? ஒளியின் வேகம் நமக்குத் தெரியும். ஒளியினோடு யோகத்தால் ஒன்றிய திருமூலர் ஒளியின் வேகத்தில் அதில் பயணித்துக் கொண்டிருப்பார் அல்லது திளைத்துக் கொண்டிருப்பார். அவருக்கு அந்த ஒளியிடத்தில் ஒன்றி இருக்கும் நேரம் 3000 நொடியாக இருக்கலாம். ஆனால் அதற்குள் பூமியில் 3000 ஆண்டுகள்கழிந்து போயிருக்கும். இதற்கு ஐன்ஸ்டின் காட்டிய விஞ்ஞான கணக்கே சான்று.

இதைத்தான் தேவ ஆண்டு வேறு மனித ஆண்டு வேறு என்று புராணங்களில் ஆன்றோர்கள் சொல்லிவைத்தார்கள். தேவர்களுக்கு ஒரு பகலும் இரவும் கூடியது நமக்கு ஒரு ஆண்டு என்பார்கள். மார்கழி மாத வழிபாடு இந்த் அடிப்படையிலே தானே அமைத்தார்கள். தேவ ஆண்டின் படி மார்கழி மாதம் அவர்கட்கு வைகறை என்றார்கள்.

எனவே 3000 ஆண்டகள் திருமூலர் ஏன் இப்புவிமேல் இருந்திருக்க முடியாது? இது உண்டு என்று விஞ்ஞானம் கை கொடுக்கிறது. கணக்கு காட்டுகிறது. வள்ளிமலையில் பாறைக்குக் கீழே இன்றும் தவம் செய்யும் தவ முனிவர்கள் கண்கூடாக சான்று பகர்கிறார்கள். இன்னும் இதிலென்ன சந்தேகம் இருக்க முடியும்?

எல்லாவற்றிற்கும் மேலாக திருமூலரே திருமந்திரத்தில் இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி என்று அகச்சான்று பகர்கிறார். அதுவும் இற்றுவீழும் வெற்று வாழ்க்கையில் கழித்தல்ல. எண்ணிலி கோடி காலம் தாம் இருந்த இடம் யோகத்தால் இராப்பகல் அற்ற இடத்தே என்று கூறுவதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இன்னும் பல பாடல்களில் தாம் பல யுகங்கள் இருந்ததாகக் கூறுகிறார். அவற்றை விரிக்க விரிக்க வரிந்து கொண்டே போகும்.

எனவே மன்னிய மூவாயிரத்தாண்டு இப்புவி மேல் திருமூலர் மகிழ்ந்திருந்து திருமந்திரத்தை ஆண்டிற்கொரு பாடலாகப் பாடினார் என்பது விஞ்ஞானத்திற்கு ஒத்ததே. இதை மறுப்பவர்கள் விஞ்ஞான உண்மைகளை மறுப்பவர்கள். திருமூலர் தாமே கூறிய வாக்கை மறுப்பவர்கள் ஆகி விடுகிறார்கள்.

திருமூலர் மூவாயிரம் ஆண்டு மகிழ்ந்திருந்து பாடியதுபோல் நான் மூவாயிரம் நிமிடம் (50 மணி நேரம்) பேசினாலும் மகிழ்ந்திருந்து கேட்போம் என்று பொறுமையாக உட்கார்ந்துள்ள இந்த திருக்கூட்டத்தார் பொன்னார் திருவடிக்கு வணக்கம் சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி முதல் நாள் சொற்பொழிவை நிறைவு செய்கிறேன்.